www.padippakam.com

# தென்றல்

M. Perinbam
Frobelstraße 34
Tel. 0 23 02 / 68 09 79
5810 Witten

மலர் - 6 வெளியீடு-1-2-87

— யாம் பெற்ற இன்பம் இவ்வையகம் பெற —



அன்பளிப்பு ஒன்று மட்டுமே.

"அமிழ்தினும் இனிதாம் தமிழ்மொழியின் சிறப்பினை சுமந்தே—
தமிழினத்தின் கரங்களிலே தவழ்ந்துவரும் இத் தென்றல்."

படிப்பகம்

www.padippakam.com



ஆ...

தமிழ்ப் பட
வீடியோக்
கசெட்டுக்களா!

உடனுக்குடன் தமிழ் திரைப்பட
வீடியோக் கசெட்டுக்களின்
முதல் பிரதிகளை
நாளாந்த, வாராந்த முறையி
பெற்றுக் கொள்ளலாம்.

டாயினி வீடியோ
சென்ரர்

SIVAARUL AUGASTIN
AMIX STR - 26
43, ESSEN - 1
W. GERMANY.
~ x ~

T. PHONE :-
0201/629507.

KASTANIENALLEE STR-102
ESSEN
W. GERMANY.
~ x ~

T. PHONE
0201/238999.

G. SIVAPRAKASAM;
ZIMMER - 8
AMSONDORT - 9
4030, RATINGEN - 5
W. GERMANY.

www.padippakam.com

மலர் :- 6 1-2-1987.



அவனன்றி ஓரணுவும் அசையாது

எமது உள்ளத்திலிருந்து.........


இன்று எமது சஞ்சிகை அரைவருடத்தைப் பூர்த்தி செய்யும் அதே வேளையில், அதனை வாசித்து மகிழும் வாசக அன்பர்கள் யாவரும், எம்மால் நடாத்தப்படும் போட்டிகளில் கலந்து கொள்ளாமல் அதனைப் படித்து மகிழ்வதில் மட்டுமே தங்கள் கவனத்தைச் செலுத்துவது எமக்கு மிக்க கவலையை ஏற்படுத்துகிறது. குறிப்பாக, கடந்தமாதம், நாம், பொங்கல் தினத்தை முன்னிட்டு ஓர் இலக்கியப் போட்டியை நடாத்தினோம். ஆனால், மூன்று பேர் மாத்திரமே பங்குபற்றியுள்ளார்கள். இதனால் 'தென்றல்', இதனைத் தற்சமயம் ஓர் போட்டியெனக் கருத முடியாத நிலையில் உள்ளது. இருந்தபோதிலும், அவர்களைக் கௌரவிக்கும் நோக்குடன், அவர்களுக்கு இலவசமாக எதிர்வரும் ஆறுமாதங்களுக்கு 'தென்றல்' சஞ்சிகை வழங்கப்படும் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

மேலும், இன்னுமொரு ஏமாற்றத்தினை வாசக நண்பர்களாகிய நீங்கள் 'தென்றலுக்கு' வழங்குவது 'தென்றலின்' வளர்ச்சிக்கு ஒரு தடைக்கல்லாக அமைந்துவிடுமோ என எண்ணத்தோன்றுகின்றது. அதிகப்படியான வாசக நண்பர்கள் கூடுதலாகத் 'தென்றல்' நடாத்தும் போட்டிகளில் கலந்து கொள்வதிலேயே கவனம் செலுத்துகின்றனர் என்பது அனுபவரீதியில் கண்ட உண்மை. அதனையிட்டு சந்தோசப்படும் அதேவேளையில், இனிய போட்டிகளிலும் கலந்துகொள்வதுடன் இலக்கியத்துறையிலும் தங்கள் பங்கினை செலுத்த முன்வருவார்களாயின் அது, தமிழுக்குச் செய்யும் ஓர் பெரும் சேவையாகக் கருதப்படும்.

வாழ்க தமிழ்.... வளர்க தமிழர்தம் கலைகளும்.....

~ x ~

படிப்பகம்


அந்தத் தவறுக்கு எமது இயக்கம் பொறுப்பல்ல அந்த இயக்கம்தான் காரணம்.
இல்லே. இதுவெல்லாம் கட்டுக் கதை அந்த இயக்கம் தான் காரணம்.
இவர்கள் எப்பதான் ஒற்றுமையாகி---- நாட்டு மக்களை ஒற்றுமைப் படுத்தி தமிழ் ஈழம் காண்பதோ!
ஐயோ தலைவெடிக்கிறது
மக்கள்

www.padippakam.com

# சிந்தனைக்கு.



## மற்றவர்களைக் கவர்வது ........ எப்படி?......

மற்றவர்களைக் கவர்வதென்பது ஒரு கலையாகும்.
இந்தக் கலை.... ஒருவன் வாழ்வில் முன்னேற அவசியமாகும்.
நாம் பல்வேறுபட்ட தராதரத்திலுள்ள மக்களுடன் பழகுகிறோம்.
எனவே.... ஒவ்வொருவருடனும்... பழகும்போது.... அவர்களை வேறுபட்ட கோணங்களில்... அணுக வேண்டியவர்களாகின்றோம்.
பொதுவாகவே.... மனிதத்துவம் புரிந்த ஒருவனுக்கு.... இது.... கைவந்த கலையாகும்.
ஒருவனுடைய உணர்ச்சிகளின் பிரதிபலிப்பை பொதுவாக முகமும்.... கண்ணும் காட்டிக் கொடுத்துவிடும். எனவே.....
ஒருவரை அணுகுவதில்.... அவர்தம் இதய உணர்வுகளைப் புரிந்து கொண்டு பழகுவதில்.... அவர் இதயத்தை மென்மையாக வருடிக் கொடுப்பதிலே-தான் உங்கள் சாமர்த்தியம்.... அடங்கியுள்ளது. இந்தக் கலை.... புரிந்தவனுக்கு... ஒரு கற்பாறையையும் அசைக்க முடியும்; ஒரு முள்ளையும்.... மலராக்க முடியும்.... ஒரு கல்லையும் கனியவைக்க முடியும். அதற்கு, அவன் தன்னுணர்ச்சிகளை.... ஆளத் தெரிந்தவனாக இருக்க வேண்டும். கட்டுப்பாடு மன-க்தி வாழ்ந்தவனாக இருக்கவேண்டும். இது இயற்கையின் மாத்திரம்தான் ...வனுக்கு அமையும் என்பதல்ல. இத்தகைய திறமையை வளர்த்துக்கொ-...வது ஒவ்வொருவருடைய முயற்சியையும் பொறுத்தது. அதற்காக நீங்கள் ...பாலித்தனமான மனிதர்களாக வாழத் தேவையில்லை. ஒருவருடைய ...தயத்தைப் புண்படுத்துவது.... கொலையிலும் கொடியதல்லவா?
...ங்களிடம் உள்ள பொறுமை, சகிப்புத்தன்மை, தியாகம், இரக்கம் என்ற ...குணங்களே மற்றவர்களைக் கவர.... ஒரு படிக்கல்லாகும் போது ... அவை உங்களுக்கு.... உலகில் ஒரு உன்னத நிலையை ஏற்ப-...த்தி மற்றவர்களைக் கவர உதவுவதில் தவறென்ன?

ல ல ல — இதழாசிரியர் —

---

உலகில் விலைமதிக்க முடியாதவற்றில் ஒன்று ஒரு சிறந்த கலைஞனின் படைப்பு. *



படிப்பகம்

www.padippakam.com

# தென்றல் என்னைத் தேடி வந்தாள்
# திகட்டாத தேன் சுவைகளை சுமந்து வந்தாள்

- க. யோகேஸ்வரன்

என்னை மறந்திங்கே
எண்ணங்களை அலையவிட்டேன்
மண்ணை நேசித்தே - நான்
மனதைக் கலைய விட்டேன்
கண்ணீர் சிந்தியிங்கே
கவலையுடன் நானிருக்க
'தென்றல்' அவள் தேடிவந்தாள்
தேன் சுவைகளைத் தான் தந்தாள்
சிந்தனையைத் தூண்டியவள்
சிரித்திடவே செய்திட்டாள்.
நன்றிகள் பலகோடி
நயமாகத் தருகின்றேன்
வளம் பெற்று வளர்ந்திடவே
வாயார வாழ்த்துகின்றேன்...
தென்றலே நீ வரும் நாள் எதுவோ
தேடி நான் வந்திடுவேன் பாதி வழி.



www.padippakam.com

# விஸ்வநாதன் வேலை வேண்டும்?

— மணிபல்லவன் —



இன்னும் முற்றாக விடியவில்லை. ஐந்து மணிக்கு வைத்த அலாரம் கூட அடித்துக் களைத்து ஓய்ந்துவிட்டது. வெளியே பனிகொட்டும் சத்தம். பலமான காற்று லைற் கம்பத்துடன் மோதி ஒலித்த நாதத்தை எழுப்பிக் கொண்டிருந்தது.

பரமேசன் இடைக்கிடை மணியை பார்த்துவிட்டு 'சோஷல்' பெட்சீற்றுக்குள் சுருண்டு போனான்.

வந்து ஒரு வருடத்துக்கு மேலாகிறது. வட்டி வேற வளர்ந்து விஸ்வரூபம் எடுத்துவிட்டது. ஒரு வேலை தேடும்படி அவன் மனைவி அவனைப் போட்டு உருட்டுவது கனவிலும் தெரிகிறது. ஒரு எதுக்கும் அவள் இப்படி எழுப்புவதில்லை.

அவனும் ஏழு 'றெஸ்ரோரண்ட்' படிகளிலே. சில இடங்களில் ஏறமுதல் கைனைற். சில இடங்களில் பப்பியர். பாழாய்ப் போனவங்கள் ஒருவனுக்கு வேலை கொடுத்துவிட்டால் குடியா முழுகிவிடும்? கைகால் வேற விறைப்பெடுக்குது. ஏதோ சட்டமாம். பொலிற்சாயமாம். வெருட்டுறாங்கள். ஆச்சோ போச்சோ என்று பாஷை வேறு. பரமேசனுக்கு ஒரு இழவும் விளங்குதுமில்லை. கையை விரித்தால் கைனைற் என்கிறாங்கள். அவங்கள் பாடும் கஷ்டம் போல. ஒரு முதலாளியிடம் துணிந்து கேட்டுவிட்டான். "உன்பாடும் கஷ்டம்தான் போல. வாவன் இரண்டு பேருமா வேலை தேடுவம்?" அவனுக்கு விளங்கியதோ இல்லையோ 'றவுஸ்' என்று கத்தியவன் கதவை அடித்து மூடிவிட்டான்.

"கேட்டுதே. உங்களைத்தானே! மணி ஆறு ஆகுதல்லவா. எழும்பி வெளிக்கிடுங்கோவன்."!

மனைவி போட்ட சத்தத்தில் புத்திரன் வேறு எலாம் அடிக்கத் தொடங்கிவிட்டான்.

இனியும் சோஷல் பெட்சீட் தாங்காது. எழும்பித்தான் தீர வேண்டும்.

வெளியே எட்டிப் பார்த்தான் பரமேசன். இன்னும் விடிய வில்லை. தெருவிளக்குகள் கடுங்குளிரில் அழுது வடிந்து கொண்டிருந்தன.

"இந்தக் குளிருக்குள்ள எங்கப்பா போகச் சொல்ற?"

"குறேன் மார்க்கட்டுக்கு ஏழுமணிக்குப் போனா ஏதேனும் வேலை கிடைக்குமென்டு, சந்திரனும், மோகனும் சொன்னவங்கள்தானே. போய்ப் பாருங்க."

"சந்திரனும் சூரியனும் தரித்திரம் பிடிப்பான்கள்!" பலக்கையைச் சுற்றிவிட்டு அவங்களையும் திட்டிக் கொண்டு பாத்ரூமுக்குள் நுழைந்தான் பரமேசன்.

ஏதோ ஒருநாள் இரண்டுநாள் தூக்கிப்பறிச்சாங்களாம் பத்துப் பேருக்கா வேலை கொடுப்பான்கள்? அதை வந்து அவன் வீட்டில் சொன்னதிலிருந்து அவன் மனைவிக்கு வேலை, அலாரம் வைப்பது.

எவ்வளவு சொல்லியும் கேட்கிறாள் இல்லை.

பரமேசன் சுறுசுறுப்பானவன்தான். வேலை செய்யவேண்டுமென்று சதா எண்ணிக் கொண்டு 'சமர் முழுக்க' செல்லடை போட்டுத் தேடியாச்சு. ஒரு மணித்தியால வேலையும் கிடைத்த பாடில்லை. சமருக்குப் போனால் வின்ரருக்கு வா என்கிறான்கள் வின்ரருக்குப் போனால் சமருக்கு வா என்று கிளித்தட்டு மறிக்கிறான்கள். வாற கோபத்துக்கு இந்த சனியன் 'டொய்ச்' கூட ஏறமாட்டேங்குது. நாலுகேள்வி கேட்க. ஊர்லாப்பில பிள்ளைளுக்கு வரட்டும். 'பிளேட்' தாடைப் பக்கம் வெட்டியதில்தான் அவன் சுயநினைவுக்கு வந்தான். உடுப்புகளையும் மாட்டிக் கொண்டு திரும்பினான். மங்கை — அவன் மனைவி — பாவம் இன்றைக்காவது இவருக்கு வேலை கிடைக்கவேண்டுமென்று உலகத்தில் உள்ள இல்லாத தெய்வங்களை மனதால் வேண்டி கோப்பி வேறு போட்டுத் தந்தாள்.

வாங்கி அருந்திவிட்டு "வாறன், பிள்ளை கவனம்" என்றவன் முகத்தில் ஜில்லென்று பனிக்குளிர் வந்து அடித்துத் துன்புறுத்தியது. குளுமம் பிடித்த நாடு.

வந்த ஆத்திரத்தில் —

சந்திரனும் மோகனும் எதிரில் வந்தாங்கள் என்றால் நாலு அறை கொடுத்திருப்பான்.

அவர்களைத் திட்டிக் கொண்டே நேரத்தைப் பார்த்தான் ஆறு - நாற்பத்தைந்து.

www.padippakam.com

ஏழு மணிக்குள் இரேச மார்க்கட்டுக்குள் நுழைந்தால் நாள் ஏதாவது கொத்தும் என்றார்கள்.

தன்னாலானமட்டும் வேகமாக நடந்தான் பரமேசன். அவன் வீட்டிலிருந்து அரைமைல் தூரம்தான் இரேச மார்க்கட். இருக்கால் நடந்து சந்தியிலுள்ள பாங்கைக் கடந்துவிட்டால் வந்துவிடும். குளிர் மோசமாக இருந்தது. பற்கள் டைப் செறு அடித்தன. வேலை — ஆர்டைற் என்று கேட்கக்கூடச் சொ-ண்டு விடமாட்டாத அளவுக்கு விறைத்து விட்டது. தரித்தி-ரம் பிடித்த நாடு. கஞ்சியைக் குடித்துக் கொண்டு ஆமிட்ட அடிவாங்கிக் கொண்டு கிடந்திருக்கலாம். இல்லாட்டி ஏதாவது இயக்கத்தில் சேர்ந்திருக்கலாம். பாங்கைக் கடந்து இரேச-மார்க்கட்டுக்குள் நுழைவதற்கு வலப்புறமாக ரோட்டைக் கடக்க வாகனங்களுக்கு வழிவிட்டுக் கொண்டு நின்றான் பர-மேசன். அந்த இடைவேளைக்குள்

சற்றுத் தலையை நிமிர்த்தி இரேசமார்க்கட் பக்கம் பார்த்தான் பரமேசன்.

கறுத்த உருவமுடைய இருவரைப் பொலிசார் பிடி-த்துத் தெருவிளக்கின் அருகில் நிற்பாட்டியிருந்த காரில் ஏற்றினார்கள். என்ன ஆச்சரியம்.

பரமேசனின் கண்கள் கூர்மையடைந்தன. சந்தேகமேயில்லை. சந்திரனும் — மோகனும் தான்.

" வேணுமடா உங்களுக்கு. என்னை இந்தக் குளிருக்-குள்ள வெளிக்கிட வைத்தது நீங்களல்லவா? போயிட்டுவா-ங்க. ஆர்டைட்டாம் ஆர்டைட். இனி வேக் பெமிட்டை ஒரு கையாலே உயர்த்திப் பிடித்துக் கொண்டல்லாமல்," இந்த வேலை தேடும் வேலை வேண்டவே வேண்டாம். கடவுள் காத்தது!

டக், டக். கதவு பலமாகத் தட்டும் சத்தம் கேட்டு மங்கை திடுக்கிட்டுக் கதவைத் திறந்து பார்த்தாள்.

" ...பொ...லி...ஸ்" .... சொல்ல முடியவில்லை. சொல்லும் வரவில்லை — சொண்டும் விடவும் இல்லை.

" உள்ளுக்கு வாங்க" ---- இழுத்தெடுத்தாள் மங்கை — பாவம் — அவள்.

* முற்றும் *



படிப்பகம்

# நீங்கள் ஒரு நல்ல மனைவியாக இருக்க ... விரும்புகிறீர்களா...?

(கீழ்வரும் வினாக்களுக்கு 'ஆம்' அல்லது 'இல்லை' என்ற பதில்களைத் தாருங்கள். இதில் பத்துக் கேள்விகளுக்கும் சரியான விடை அளித்தவர் – ஒரு நல்ல மனைவி. இதில் ஐந்துக்கும் மேற்பட்ட கேள்விகளுக்கு சரியாக விடையளித்தவர் ஒரு நல்ல மனைவியாக எதிர்காலத்தில் அமைய முயற்சி செய்யலாம்.)



1) உங்கள் கணவர் வெளியிலிருந்து வந்தவுடனேயே வீட்டுப் பிரச்சனைகள் பற்றி கலந்து உரையாடுகிறீர்களா?

2) குழந்தைகளின் எதிர்காலத்திட்டங்கள் பற்றிய முடிவுகளை எடுப்பதில் உங்கள் கணவருக்குரிய உரிமைகளையும் வழங்கி நீங்கள் ஒதுங்கிக் கொள்கிறீர்களா?

3) கணவர் கொண்டுவரும் சம்பளப்பணத்தை நீங்களே பொறுப்பேற்று குடும்பத்தை நிர்வகிக்கப் பயன்படுத்துகிறீர்களா?

4) வீட்டு வேலைகளை உங்கள் கணவர் செம்மையாகக் கவனிக்க கடைக்குப் போவது போன்ற வெளிவேலைகளை உங்கள் தலையில் பொறுப்பேற்கிறீர்களா?

5) எப்பொழுதும் உங்கள் கணவரைச் சார்ந்தவர்கள் செய்யும் தீங்குகளை உடனுக்குடன் சுட்டிக்காட்டி உங்கள் கணவரை நல்வழிப்படுத்துகிறீர்களா?

6) கணவர் சில பிரச்சனைகளால் கலங்கித் தவிக்கும்போது உங்களுக்குச் சரியெனப்பட்ட கருத்துக்களையும் கூறி, பிரச்சனைக்குத் தீர்வு காண்பதில் உங்கள் பங்களிப்பையும் செலுத்துகிறீர்களா?

7) உங்கள் கணவர் கடன்பட்டாவது உங்களையும் உங்கள் குழந்தைகளையும் சிறந்த வாழ்க்கை வசதிகளுடன் வாழவைக்க அவரைத் தூண்டுகிறீர்களா?

8) உங்கள் கணவர் வேலையிலிருந்து வீட்டுக்கு வரும்போது நீங்கள் உங்களை அலங்கரித்துக் கொண்டு மகிழ்ச்சியுடன் அவரை வரவேற்கிறீர்களா?

9) குழந்தைகள் தவறு செய்யும்போது உங்கள் கணவர் அவர்களைக் கண்டிப்பதை நீங்கள் தடுக்கிறீர்களா?

10) உங்கள் கணவரின் தொழில் பற்றிய நிர்வாகத்தில் நீங்கள் அடிக்கடி தலையிடுகிறீர்களா?

www.padippakam.com

# தீபத்தை அணைக்காதே

— யாழினி —

## 6

வெங்கடேசுவரன் சீதாவின் விரலில் கட்டப்பட்
டுள்ள கட்டையும் ராஜாராமின் 'செட்' ஐயும் பார்த்தவர்... ஒரு
கணம் அதிர்ச்சியடைந்துதான் போனார். ஆனால் ஒரு விநாடியில் தம்-
மைச் சுதாகரித்துக் கொண்டவர் "தம்பி! கூச்சப்படாமல் சாப்-
பிடுங்கள். சீதாவின் கைவண்ணம் அவ்வளவு மகத்துவமானது."
என்றவர் "சீதா... தம்பிக்குக் கொஞ்சம் வற்றல் குழம்பு போடு...
பார்த்துப் பரிமாறு" என்றவர் அதன் பின்பு மௌனமாகச் சாப்பிட
லானார். கிரகித்துச் சாப்பிடும் நிலையிலா ராஜாராமன் இருந்தான்
மௌனமாகச் சாப்பிட்டு முடித்தவன் அவருக்கு குட்நைட் சொல்
லிவிட்டுக் கனத்த தலையுடன் மாடிப்படி ஏறினான்.

அகிலாண்டேசுவரி உறவினர் வீட்டு ஹாலில்
அமர்ந்த வண்ணம் தனது ஒன்றுவிட்ட தமையனிடம் தேவகிக்கு
ஒரு வரன் பார்க்கும்படி கூறிக் கொண்டிருந்தாள். அவரும்...
"அகிலாண்டம்... தேவகிக்கு நாம் ஒரு மாப்பிள்ளையைப் பார்க்க
... வெங்கடேசுவரர் மறுத்துவிட்டால் என்ன செய்வது. அவரு-
டைய போக்கே தனிதான். அதுதான் யோசிக்கிறேன்" என்றார்.
அகிலாண்டேசுவரியும் "அதற்காக... அவள் இப்படியே கல்யா-
ணம் காட்சி இல்லாமல் இருந்திட முடியுமா? ... அவருக்கும்
வயதாகிறது. அவரும்... அதுபற்றி... அக்கறையில்லாமல் இருக்-
கிறார். பெண்ணைப் பெற்ற நானல்லவா... வயிற்றில் நெருப்பைக்
கட்டிக் கொண்டு இருக்க வேண்டியுள்ளது." என்று கூறிக்-
கொண்டிருந்த அகிலாண்டேசுவரி வாசல்புறம் பார்த்தவள்...
அப்படியே திகைப்புடன் பார்த்தவண்ணம் இருந்தாள். அங்கே
சந்திரன் தேவைக்கோ அல்லது நாகரிகத்துக்கோ அணியப்
பட்டது என்று கூறமுடியாத அளவுக்கு ஒரு வகைக் கண்ணாடி
யுடன் நவநாகரிகத் தோற்றத்துடன் ஹாலுக்குள் பிரவேசித்துக்
கொண்டிருந்தான். அகிலாண்டேசுவரியைக் கண்டதும் சந்-
திரனின் முகம் ஒரு கணம் இருண்டது. மறுகணம் தன்னைச்
சமாளித்தவனாக "ஏ! அத்தையா! ஏது இந்தப் பக்கம்" என-
றான் சற்று ஏளனமான புன்னகையுடன். "அதைத்தான் நான்
உன்னைக் கேட்கிறேன். நீ... ஏது இந்தப் பக்கம். இத்தனை



படிப்பகம்

www.padippakam.com

வருடங்களில் ஒரு நாளாவது எங்க வீட்டுப் பக்கம் வந்திருக்கிறாயா? உன்னைப் பார்த்து எவ்வளவு நாளாச்சு. ஆளே... அடையாளம் தெரியாமல் மாறியிருக்கிறாய்" என்றாள் அகிலாண்டேஸ்வரி மனத்தாங்கலுடன். "அது போகட்டும்... அத்தை எங்கே மாமா, தேவகி, சீதா எல்லோரும். நீ மட்டும்தான் தனியாக வந்தாயா?" என்று கேட்டுக் கொண்டிருந்தவன் எதிர்பாராத விதமாக தேவகி ஹாலில் பிரவேசித்ததும் "நீ... நீ.... தேவகி... இல்லையா? இவ்வளவு அழகாக... எப்படி வளர்ந்தாய்" என்று ஆச்சரியப்பட்டான்.



அகிலாண்டம் பெருமையுடன் சிரித்தவள் "சந்திரா! உன் அத்தை பெண்ணையே உன்னால் அடையாளம் காணமுடியாமல் இருக்கிறது. நாங்கள் உனக்கு என்ன செய்தோம் என்று எங்கள் வீட்டை மறந்து விட்டாய்." என்றாள் ஆதங்கத்துடன். அதற்கு சந்திரன் "அது போகட்டும் அத்தை எங்கே மாமாவும், சீதாவும்" என்றான். "அதை ஏன் கேட்கிறாய். ஒரு கூத்துத்தான் எங்கள் வீட்டில் நடக்கிறது ராஜாவோ யாரோ ராஜாராம்-மோ ஒரு அன்னக் காவடிப் பயல் உன் நண்பனாம் என்று எங்கள் வீட்டுக்கு வந்திருக்கிறான். உன் மாமாவுக்கும்... புத்தி பிசகி விட்டது. அவனைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டு கொண்டாடுகிறார். உன் பெயரைச் சொன்னதால்தான் அவனை என்


www.padippakam.com

வீட்டில் விட்டு வைத்திருக்கிறேன்" என்றாள் அகிலாண்டம் ஆக்கிரோஷத்துடன். "ராஜாராமா --- என் பெயரைச் சொன்னது --- ஓ -- ஆனால் --- அவன் -- " என்று கூறவாயெடுத்த சந்திரன் தாயின் பின்னே நின்ற தேவகி கைகளாலும் கண்களாலும் சைகை செய்வதை உணர்ந்து இதில் --- ஏதோ மர்மம் இருக்கிறது. அதில் இந்த தேவகிக்கும் சம்மந்தம் இருக்கிறது என்று ஊகித்தவனாக " அத்தை! ராஜாராம் என் நண்பன்தான். அவன் சொன்னது உண்மைதான். என் எதிரில் என் நண்பனைப் பற்றிக் கேவலமாகப் பேசாதீர்கள்." என்றான். இந்தக் கடைசி வார்த்தையைக் கூறும்போது உண்மையிலேயே சந்திரனின் குரல் கடுமையாக ஒலித்தது. அகிலாண்டேஸ்வரி மேற் கொண்டு எதுவும் பேசவில்லை. பேசினால் எங்கே முன்பொரு நாள் தன் வீட்டில் கோபித்துக் கொண்டு வெளியேறியது போல் மறுபடியும் எங்கே கோபித்துக் கொண்டு விடுவானோ என்று பயந்தவளாக "அது சரி --- அதைப் பற்றி இப்ப -- என்ன. தம்பி இந்தத் தடவையாவது வீட்டுக்கு வா?" என்றாள் அகிலாண்டேஸ்வரி. சிரித்து சிந்தித்தவனாக "அதற்கென்ன அத்தை, இந்தத் தடவை ஏன --- நாளைக்கே உங்கள் வீட்டுக்கு வருகிறேன். ராமையும் சந்திக்க வேண்டியிருக்கிறது --- அத்தோடு --- இந்தத்தடவை உங்கள் வீட்டுக்கு வர உண்மையிலேயே விரும்புகிறேன்." என்ற வண்ணம் மந்தகாசமான புன்னகையுடன் தேவகியை நிமிர்ந்து பார்த்தான். சந்திரனின் கண்கள் அவள் உடலெங்கும் --- அங்காங்கு --- வாளிப்பான --- அவள் அங்கங்களில் --- ஒரு இச்சையுடன் --- மேய்ந்தன.

— தொடரும் —

---

ஒரு விலைமகளிடம் சென்றும் தமக்கு இயல்பாக அமைந்த நாண உணர்ச்சியால் அந்தத் தவறிலிருந்து மீட்கப்பட்டுத் துரத்தியடிக்கப்பட்டாலும், எப்போது விபச்சார எண்ணம் தன் மனதில் இடம் பெற்றதோ அப்போதே நான் விபச்சாரம் செய்தவன் ஆகிறேன் என்கிறார் 'சத்திய சோதனையில்' மகாத்மா காந்தி அவர்கள்.





படிப்பகம்

www.padippakam.com

## விஞ்ஞானமும் மெய்ஞானமும் II (சென்ற இதழ்த்தொடர்ச்சி)

[-- பி. ஜெகநாதன் --]

மெய்ஞானம் – விஞ்ஞானம் இரண்டுமே கத்தி போன்றவை


கத்தியால் கத்தரிக்காயையும் வெட்டலாம் — அடுத்தவனின் கழுத்தையும் வெட்டலாம். அது கத்தியின் தவறல்ல பாவிப்பவனின் தவறு. அப்படியே மெய்ஞானம், விஞ்ஞான என்ற கத்திகளை மனித வர்க்கம் பூரணமாக ஆக்கபூர்வமான முறையில் பயன்படுத்துவதா என்பது கேள்விக்குறியே நாளொன்று அணு ஆயுத உற்பத்திக்காகவும் ஆராய்ச்சிக்காகவும் யுத்தத்திற்காகவும் உலகில் உள்ள அனைத்து நாடுகளினால் செலவிடும் பணத்தை சேர்த்தால், அத்தொகையை வைத்து ஒரு மாதத்திற்கு பட்டினிப் பேயை முழு உலகத்தில் இருந்தும் விரட்ட முடியும் என்கிறது "ஐ.நா" அறிக்கை ஒன்று. அதே அணுசக்தியை உலகின் முடக்கி ஆக்கத்திற்கும் பாவிக்கலாம் — அணுகுண்டு செய்து, நிமிட நேரத்தில் முழு உலகையும் அழிக்கலாம். ஆம் பெற்ற அறிவை நன் முறையில் பயன்படுத்த ஆரோக்கியமான மனநிலை தேவை அது நாட்டை ஆள்பவனுக்கு மட்டுமல்ல. மக்களின் பெரும்பான்மையினருக்கும் இருக்க வேண்டும். ஏனென்றால் எந்த நாட்டின் தலைவனும் பெரும்பான்மை மக்களின் விருப்பத்திற்கு மாறாக எதையும் செய்ய முயலான். எனவே மக்கள் மத்தியில மாற்றம் தேவை. ஆனால் அமெரிக்க மக்களோ ரீகனின் நட்சத்திரப் போர்த் திட்டத்தை ஆதரிக்கின்றனர். காரணம் மெய்ஞான ஈடுபாட்டுக் குறைபாடுதான். ஆம் விஞ்ஞான அறிவையும், சக்தியையும் ஆக்க பூர்வமாக்க ஒரு மனநிலை மனப்பக்குவம் தேவை. அதுவும் மக்கள் மத்தியில் தேவை இதை சமயமும் மெய்ஞானமும் மட்டுமே செய்ய இயலும். இல்லாவிட்டால் இந்த விஞ்ஞான அறிவு அழிவிற்கே பயன்படும். இதனை தானோ என்னவோ நமது பாரதியும் 'நல்வழியில் இட்டுச் செல்லாத அறிவு அறியாமையை விட ஆபத்தானது" என்றான். இது எவ்வளவு தூரம் உண்மையானது என்பதை நீங்கள் யாவரும் "3வது அணுஆயுத நட்சத்திரப் போர் அச்சத்தை வைத்து முடிவெடுத்துக் கொள்ளலாம்.

மற்றொரு சமயம் சுவாமி விவேகானந்தா அவர்கள் அமெரிக்க பல்கலைக்கழகமொன்றில் உரையாற்றும் போது "நீங்கள் கத்தியை பெருக்கும் அறிவை

படிப்பகம்

www.padippakam.com

விஞ்ஞான ஆராய்ச்சிகள் மூலம் பெற்றுவிட்டீர்கள் என்பது உண்மையே. ஆனால் அதை ஆக்கபூர்வமான முறையில் பயன்படுத்தும் சகிப்புத்தன்மையையும், விவேகத்தையும், மனப்பக்குவத்தையும் பெறவில்லை." என்று குறிப்பிட்டார்.




உடல்பாதி, உயிர்பாதியாக உள்ள மனிதனின் முதற்பகுதியை தர்க்கரீதியாக ஆதாரத்துடன் ஆராய்வது விஞ்ஞானம். பிற்பாதியுடன் தொடர்புடையது மெய்ஞானம். ஆனால் இதற்கு போதிய சான்றுகள் இல்லை. அதாவது விஞ்ஞானம் ஆனது பரிசோதனை வாயிலாக நிரூபிக்கப்பட்ட விதிகளை (Laws) அத்திவாரமாகக் கொண்டு கட்டி எழுப்பப்பட்டது. இயலுமானவரை கொள்கை, கருதுகோள், கருத்து ... என்ற நிலையில் உள்ளவற்றை ஆராய்ந்து நிரூபிக்காமல் அது ஏற்பதில்லை. உதாரணம் போயில் சாள்ஸின் விதிகள். எனவே அதை "விசர்க்கதை" என்று யாரும் நிராகரிக்க முடியாது. இது விடயத்தில் மெய்ஞானமானது ஒரு பெரிய ஓட்டையை (A big hole) கொண்டுள்ளது. விஞ்ஞானம் கூட சில கொள்கைகளையும் ஏற்றே வளர்ந்திருக்கிறது. இதற்கு உதாரணமாக பல வானியல் உண்மைகளையும், ஐன்ஸ்ரனின் தொடர்புக் கொள்கை என்பவற்றைக் குறிப்பிடலாம். கட்டுப்பாட்டு பரிசோதனை வாயிலாக நிரூபிக்க இயலாத நிலையிலும், ஆராயும் அளவிற்கு இன்னமும் வசதிகள் இல்லாத நிலையிலும் மட்டுமே விஞ்ஞானமானது கொள்கைகளை ஏற்கிறது. அதனால் அது உறுதித்தன்மையுடையதாகப் பாமரரால் கூட கருதப்படுகிறது. மேலே ஒரு பெரும்படியான பாகுபாடு காட்டப்பட்டுள்ளது. எனவே பூரண அறிவு என்பது சகலதுறையையும் உள்ளடக்கிய நிறைபொருள்.



படிப்பகம்

www.padippakam.com

அதுவே நிறைந்த, பூரண அறிவு. ஆனால் நடைமுறையில் மேற்குலகமானது விஞ்ஞானத்திலும் கிழக்குலகமானது மெய்ஞானத்திலும் பாண்டித்தியம் கொண்டுள்ளன. இதனால்தான் டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்கள் ஒரு தடவை "அறிவுப் பரிமாற்றம் தேவையென்றார். அதாவது மேற்கு கிழக்கிற்கு விஞ்ஞான அறிவையும், கிழக்கு மேற்கிற்கு ஆன்மிக அறிவையும் கொடுத்து ஒரு வியாபாரம் நடாத்த வேண்டும் என்றார். அப்போதுதான் இரண்டு அறிவுகளும் பயன்படும் என்றார். காரணம் ஆக்கத்திற்கு அல்லாத அறிவு, அழிவைத் தரும் அறிவு பயங்கரமானதன்றோ.


மெய்ஞானத்தின் பிரதிநிதியான சமயம் மதங்கொண்ட யானை போல் மதங்கொண்டு போருக்கு வித்திடுவதும் கசப்பான ஒரு உண்மையாகும். நொதேன் அயர்லாந்தில் கிறிஸ்தவர்கள் தங்களுக்குள் மோதுகிறார்கள். பஞ்சாப்பில் படைச்சண்டை. லெபனானில் முஸ்லீம், கிறிஸ்தவர் என்ற பேதச் சண்டை. ஆம் மதங்களைப் பின்பற்றுவோர் மதங்கொண்டு அழிகிறார்கள். ஆக மொத்தத்தில் இரண்டு துறைகளுமே சரியான முறையில் பூரணமாக அமுலாக்கப்படவில்லை என்றால் அது தவறாகாது. இதனால்தானோ என்னவோ பாரதியின் கருத்திற்கு வலுவூட்டுவதைப் போல அமெரிக்க "Herald" என்ற பத்திரிகையும் சுவாமி விவேகானந்தா பற்றிக் குறிப்பிடுகையில் "Vivekanandha is undoubtfuly the grate finger in the parliament of religion. After hearing we feel how foolish it is to send mechinary to the "learnt" nation" இங்கு அப்பத்திரிகை "learnt" என்று குறிப்பிடுவது கவனிக்கத் தக்கது.

நிற்க, எத்துறையாயினும் விஞ்ஞானம் என்ற வகையுள் சேர சில தகைமைகள் தேவை. அங்கு அவதானித்து (observation) கருது கோளை உருவாக்கி காரண காரியத் தொடர்பை அறிந்து, பொருத்தமான வேண்டிய தரவுகளைச் சேகரித்து முடிவு எடுக்கப்பட்டு அது மீண்டும் நேர்மறை நிலையில் பரிசோதனை வாயிலாக நிரூபிக்கப்பட்டு "விதி" (law) ஆகின்றது. ஏற்கனவே குறிப்பிட்டது போல கொள்கை என்ற நிலையிலும் விதி (Law) இற்கு சமமான படிநிலையில் இரண்டு நிலையில் உண்மைகள் ஏற்கப்படுகின்றன.

(i) கட்டுப்பாட்டுப் பரிசோதனை நடத்த இயலாத கட்டம்.

(ii) இன்றுவரை சோதனை நடாத்த வசதியற்ற நிலை.

www.padippakam.com




Scientific method

தவிர விஞ்ஞானமானது புதிதாக எதையும் ஆக்குவதோ, முற்றாக எதையும் அழிப்பதோ இல்லை. (தாற்றனின் அணுக்கொள்கைத் திணிவுக்காப்பு விதி) திண்ம, திரவ, வாயு நிலையிலுள்ளவற்றை பலவிதமான பௌதீக/இரசாயன மாற்றங்களுக்குட்படுத்தி விந்தை புரிகிறது. மின்சாரத்தை சூடாக, குளிராக, ஒளியாக, ஒலியாக மாற்றுவதை உதாரணமாகக் கொள்ளலாம். அதே சமயம் மெய்ஞானமோ ஆன்மீக நெறியை, வாழ்வு இலக்கணத்தை வகுக்கிறது. அது தோல்வியில், ஏமாற்றத்தில் அமைதியைத் தெளிவைப் பெற வழி சமைக்கிறது. இன்று உலகில் "நாடொன்றிற்கு நாளொன்றிற்கு" என்ற புள்ளி விபரங்களை அட்டவணைப் போட்டுப் பார்த்தால் சராசரி நடக்கும் கொலை, கொள்ளை மற்றும் இதர குற்றச் செயல்கள், பைத்தியம் பிடிக்கும் விகிதாசாரம் என்பவற்றில் கூட வளர்ச்சியடைந்த முதலாவது உலக நாடுகள் சளைத்தவை அல்ல. இது மனநிலை தொடர்பான அடிப்படையில் மெய்ஞானத்தின் தேவைப்பாட்டைக் காட்டுகிறது. மொத்தத்தில் முதற் கட்டுரையிலும் வலியுறுத்தப்பட்டதைப்போல விஞ்ஞானம், மெய்ஞானம் இரண்டுமே மனித இனத்தின் கண்கள் ஆகும்.

* முற்றும் *

---

எட்டாவது பக்கத்திற்கான சரியான விடைகள்

(1) இல்லை (2) இல்லை (3) ஆம் (4) இல்லை (5) இல்லை (6) ஆம் (7) இல்லை (8) ஆம் (9) இல்லை (10) இல்லை.

# அந்த நாள்.........



சிற்றாடைப் பருவத்தில்
சின்னம்மான் மகள் எனக்கு
முற்றாத மாங்காயை
எச்சிற் படுத்தாமல்
பாவாடையால் மூடி
பக்குவமாய்க் கடித்தெடுத்து
"அத்தான் நீ சாப்பிடடா
அண்ணனுக்குக் கொடுக்காதே!
அடித்தவன் நேற்றெனக்கு."
என்றிட்ட பேதமையை
எண்ணிச் சிலிர்க்கின்றேன்
இதயங் குறுகுறுக்க...
அந்நாள் இனி வருமோ
அவள் இன்று வளர்ந்துவிட்டாள்.

— கலைச் செல்வன் —

www.padippakam.com

# வசந்த காலப் பூக்கள்

-பி. குணசேகரம்-

## 2



ஜெகன் குடியிருக்கும் வீட்டுக்காரர் அன்ரோனி மிகவும் நல்ல மனிதர். வாசுகியின் அப்பா வாசுகியைத் தன்னிடமிருந்து பிரித்து விடுவார் என்ற பயத்தில் ஜெகன் முட்டாள் தனத்துடன் அவரை அடிக்க முற்பட்ட போது அன்ரோனி ஜெகனைத் தடுத்து நிறுத்தினார். ஆனல் அன்ரோனியை உதறித் தள்ளினன் ஜெகன். "நில் ஜெகன்" என்று அன்ரோனி தடுத்தார். "நான் சொல்வதைக் கேள் ஜெகன். நாம் ஒருவரை அளவுக்கு மீறி விரும்பினல் அவர்களுக்குத் துன்பம் வரவழைக்கக் கூடாது. இது நான் சொல்லவில்லை. யேசுநாதர் கூறியிருக்கிறார்" என்றார். ஜெகன் அமைதியடைந்து கதிரையில் அமர்ந்தான்.

வாசுகி கட்டிலிலிருந்து அழுதபடி ஜெகனுக்குத் தன் கண்ணீரால் ஒரு கடிதம் எழுதினள். 'எப்படி எப்படியெல்லாமோ உங்களோடே கற்பனை பண்ணிக் கனவு கண்டு கொண்டிருக்கிறேனே. ஆனல் இந்தக் கற்பனைகள் கனவுகள் நியாயமாகுமா? இதுதான் என் இறுதிக் கடிதம்' என்றிருந்தது அதில். இந்தக் கடிதம் சங்கரின் கையில் தான் கிடைத்தது. அதைப் பறித்து ஜெகன் படித்து விட்டுத் துடித்தான். சங்கர் ஜெகனைச் சாந்தப்படு-



படிப்பகம்

www.padippakam.com

ந்தி விட்டு வாசுகியின் வீட்டுக்குப் போனான். ஐயரிடம் இந்தக் கடிதத்தைக் காட்டினான் சங்கர். "உங்கள் மகளின் சாவுக்குக் காரணமாக நீங்கள் இருக்காதீர்கள். நல்ல மகளைப் பெற்ற நீங்கள் நல்ல தகப்பனாக இருக்கப் பாருங்கள்." என்றான். ஐயருக்குக் கண்களிலிருந்து கண்ணீர் பெருகியது. "சங்கர்! என் மகள் நல்லாய் இருக்க வேண்டுமென நான் விரும்புகின்றேன். ஆனால் அதற்காக ஜெகனின் வாழ்க்கையைக் கெடுத்ததாக இருக்கக்கூடாது" என்றார். சங்கர் அதிர்ச்சியுடன் "என்ன சொல்கிறீர்கள்" என்றான். ஐயரின் கைகள் நடுங்கின. அவர் வாய் தடுமாறியது. "என் மகளின் வாழ்க்கைக்கு ஆண்டவன் மட்டுமல்ல வைத்தியரும் கூட சாவுக்கு நாட் சொல்லி விட்டார். அவளுக்கு இருப்பது 'பிளட் கான்சர்' அவள் சாகப் போகும் நாளை எண்ணி எண்ணி நானும் செத்துக் கொண்டே இருக்கிறேன்." என்றார். சங்கர் அதிர்ச்சியுடன் கால்கள் தடுமாற, ஜெகனுக்கு என்ன வார்த்தைகள் சொல்வது. தன் வாழ்க்கையைப் பற்றிக் கற்பனை பண்ணிக் கொண்டு இருக்கிறான் என்று நினைத்த வண்ணம் அம்மன் கோவிலுக்குச் சென்று அம்மனிடம் சொல்லி அழுதான். வாழவேண்டிய சின்னஞ்சிறுசுகளுக்கு ஏன் இப்படிப்பட்ட கொடிய வருத்தத்தைக் கொடுத்தாய் என்று இறைவனை நொந்தான். மேலும் இந்த விடயத்தை எப்படி ஜெகனிடம் சொல்வதென்று சங்கர் தவித்தான். ஆனால் எப்படியாவது சொல்லி விட வேண்டுமென்ற முடிவில் ஒருவாறு சிரமப்பட்டு ஜெகனிடம் வாசுகிக்கு இருக்கும் வருத்தத்தைக் கூறினான். ஜெகன் இடிவிழுந்தது போல ஒரு கணம் திகைத்து நின்றான். தன் தலையில் கைகளால் அடித்தடித்து அழுதான். இறுதியில் சங்கரிடம் "நான் வாசுகியைத்தான் திருமணம் செய்யப் போகிறேன். ஒரு நாள் அவளுடன் வாழ்வதே எனக்குப் போதும். அவள் சாகும்போது சுமங்கலியாகத்தான் சாகவேண்டும். எப்படியாவது அந்தக் கலியாணத்தைச் செய்து வை." எனக் கதறிக் கதறி அழுதான். இறுதியாக சங்கர் வாய் தடுமாற எப்படியும் செய்து வைப்பதாக உறுதி கூறினான்.

அம்மன் கோவிலில் வித்தியாவைச் சங்கர் சந்தித்ததும் எப்படியாவ[illegible]து என்ன உணர்வுகளைச்

படிப்பகம்

www.padippakam.com

சொல்லிவிட வேண்டுமென்று வாய் துடித்தது. இருந்தாலும் அவனால் அதைச் சொல்ல முடியவில்லை. இருவரும் பேசியபடி அவ்வழியால் போகும்போது ஏதோ ஒரு வேகத்தில் சங்கர் வித்தியாவைப் பார்த்து "ஐ லவ் யூ" என்று சொன்னதும் வித்தியா திகைப்புடன் பத்திரகாளி அம்மனைப்போல சங்கரை விழித்துப் பார்த்தாள். அவளுக்கு சங்கரை அடிக்க வேண்டும் போல இருந்தது. இறுதியில் வித்தியா சொன்னாள் "நீங்கள் படித்தவர் என்றுதான் நான் உங்களுடன் பழகினேன். ஆனால் நீங்கள் இப்படிக் கெட்டவர் என நான் எண்ணவில்லை." அதற்கு சங்கர் "என் ஆசைகளைச் சொன்னதற்கு நான் கெட்டவனா" என்றான். அதற்கு வித்தியா "என் இதயத்தில் இருப்பது என் கணவர் மட்டுந்தான். அதனால் வேறு எந்த ஒருவருக்கும் நான் இடங்கொடுக்க மாட்டேன். என்றாள். "இதுதான் உங்கள் முடிவா வித்தியா" என்றான் சங்கர். "ஆமாம், இதுதான் எனது முடிவு" எனக் கூறிய வித்தியா மேலும் "இந்த விடயத்தைவிட்டு என்னை இனித் தொடர்ந்து வந்தால் நான் உயிரோடு இருக்கமாட்டேன். எனக்குக் கெட்டபெயர் வாங்கிக் கொடுக்காமல் இருந்தால் போதும்." என்றாள். அதற்கு சங்கர் "அடுத்த பிறப்பு என்று ஒன்று இருந்திட்டால் நாமிருவரும் கணவன் மனைவியாக இருப்போம்" என்றான். அதற்கு வித்தியா "அடுத்த பிறப்பு என்று ஒன்று இருந்திட்டால் அது என் கணவர் ஒருவருக்கு மட்டுந்தான்" என்று சொல்லிவிட்டு அவ்விடத்தை விட்டுச் சென்றுவிட்டாள்.

~ * ~

- தொடரும் -

---



மகளைப் பெற்றவர்
"நண்பா ஏன் யோசித்துக் கொண்டிருக்கிறாய்?

மகனைப் பெற்றவர்
"இரண்டு நாட்களாக என் மகனைக் காணவில்லை? பெரிய இடத்து சம்பந்தம் ஒன்று பேசி வைத்திருந்தேனே!

மகளைப் பெற்றவர்
"இரண்டு நாட்களாக என் மகளையும்தான் காணவில்லை. நான் எவ்வளவு நிம்மதியாக இருக்கிறேன் தெரியுமா!

www.padippakam.com

# குழப்பமான ஆட்சி

ஆதாரம்:— Tamil Times
தமிழாக்கம்:— ரி.கே:-

கனடாவின் இலங்கை மீதான அதிகாரபூர்வமான நடத்தை தோல்வியடைந்திருக்கிறது. எமது அரச அலுவலகத்தினரும், அரசியல்வாதிகளும் இன்னும் தங்கள் பிழையான பாதையிலேயே சென்று கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அங்கே இலங்கையில், சிங்கள பெரும்பான்மையினருக்கும் சிறுபான்மைத் தமிழருக்கும் இரண்டு பாகங்களிருந்து வருவதைக் கட்டாயம் அறிந்து கொள்ளவேண்டும். இரு பகுதியினரும், நடைபெறும் போராட்டத்திலே குற்றவாளிகளாகவும் கொலை செய்யப்பட்டும் இருக்கிறார்கள். ஆனால் இதில் கூடுதலாகப் பாதிக்கப்பட்டவர்கள் தமிழர்கள் தான். அதனால்தான் தமிழர்கள் தங்கள் நாட்டைவிட்டு வேறு நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளார்கள். அவ்வாறு தஞ்சம் புகுந்தவர்களில் சிலர் திறமையாகவும், துணிவாகவும் உறுதியற்ற படகுகளில் கூட தங்கள் பயணத்தை மேற்கொண்டுள்ளனர்.

இதன் விளைவு, கனடா அரசாங்கம் தன்னிடமுள்ள பதினெட்டு நாடுகளைக் கொண்ட கறுத்தப் பட்டியலில் இலங்கையையும் சேர்த்துள்ளது. மேலும் தமிழ் அகதிகள் யாவரும் இலங்கைக்குத் திருப்பியனுப்பப்பட மாட்டார்கள். இதுவரை ஒற்றோவாவின் நடத்தைகள் தெளிவாக இருக்கின்றன. ஆனால், பின்பு கிளம்பிட்ட இரண்டுவகையான கேள்விகள் உண்டாகத் தடுமாற்றம் ஏற்படுகிறது.

1) ஏன் ஒற்றோவா அரசாங்கம், கனடாவிற்கான இலங்கைத் தூதுவரின் மேலுள்ள குற்றச் சாட்டுகள் சம்பந்தமாக, முதன் முதலில் அவர் கனடாவிற்கு விஜயம் செய்த போது அவருக்கெதிராக நடவடிக்கை எடுக்கத் தவறியது?

2) சிறுபான்மைத் தமிழரைத் துன்புறுத்தும் இலங்கை

www.padippakam.com

அரசாங்கத்திற்கு இன்னும் நாங்கள் ஏன் உதவி வழங்-
கிக்கொண்டிருக்கிறோம் ?

கனடாவில் வாழும் தமிழ் சமூகத்தினரின்
பலத்த எதிர்ப்புக்கள் மத்தியிலும் ஒற்றேவா அரசாங்கத்-
தால் பிரிகேடியர் ஜெனரல் திசாவீரதுங்காவின் விண்ணப்-
பம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இவர் தமிழ் பிரிவினைவாதி-
களைக் கொடூரமான முறையில் சித்திரவதை செய்திருந்-
தமையே, தமிழ் மக்களின் பலத்த எதிர்ப்புக்குக் காரண-
மாக அமைந்தது.

திசாவீரதுங்காவின் தமிழ் மக்கள் மீதான
கொடூரமான நடவடிக்கைகளுக்கான உறுதியான சான்
றுகள் தங்களிடம் உள்ளதென சர்வதேச மன்னிப்புச்
சபை கூறுகிறது. அதே சமயம், தமிழ் மக்களும் தாங்கள்
மிகவும் கொடூரமான முறையில் வீரதுங்காவினால் சித்திர
வதையடைந்துள்ளதாக உறுதியாகக் கூறியுள்ளார்கள்.
திசாவீரதுங்கா மீதான குற்றச்சாட்டுக்கள் இன்னும் நிரூபிக்
கப்படவில்லையெனவும் ஆனால் அந்த மாதிரியான கடுமை-
யான குற்றச்சாட்டுக்கள் இனிமேல் நிச்சயமாக விசாரிக்
கப்பட வேண்டியவையாக இருக்கிறது என்றும் கனடாவின்
வெளிநாட்டமைச்சு கூறுகிறது.

இலங்கைக்கான கனடாவின் வருடாந்த உதவி
$30-மில்லியனைப் (கனடியன் டொலர்) பற்றி உங்களில்
எவராவது விளக்கம் அளிக்க முடியுமா?

கனடாவின் சர்வதேச அபிவிருத்திச் சபை எங்-
கள் பணத்தைக் கொடுக்கிறது. ஆனால் அந்நாட்டு மக்கள்
தமது உயிரைக்காப்பாற்றுவதற்காகப் புகலிடம் தேடி வேறு
நாடுகளுக்குச் செல்கின்றனர்.

ஓ... கனடாவின் அபிவிருத்திச் சபை இதுபற்றி
விளங்கிக் கொண்டுள்ளது. பிரச்சனை என்னவென்றால்
அவர்கள் நியாயமற்றமுறையில் நடக்கிறார்கள். இலங்கை
ஒரு குடியரசு நாடென்றும், அவர்களுடனான நட்புறவு
1950ம் ஆண்டிலிருந்துள்ளதென்றும் கனடிய சர்வதேச
அபிவிருத்திச் சபை கூறுகிறது. ஆகவே. இங்கு இலங்கை
யின் நியாயமற்ற ஆட்சிமுறையை கனடாவின் சர்வதேச
அபிவிருத்திச் சபை சிந்திக்கத் தவறுகிறது.


படிப்பகம்

www.padippakam.com

கொடூரமான முறையில் சித்திரவதை செய்யப்பட்டவர்களின் சாட்சியங்களை ஆலோசனை செய்வதற்கு மேல்மட்டத்திலிருந்து கீழ்மட்டத்திற்கு அதிகாரிகள் சிலவேளை இறங்கி வரலாம்.

தமிழ் மக்களுக்குச் செய்யப்பட்ட கொடுமை சந்தேகத்திற்கிடமின்றி இருந்த போதிலும் அரசியல்வாதிகளும், வெளியமைச்சின் அதிகாரிகளும், யார் இதை மேற்பார்வையிடுவதென்பது பற்றி இன்னும் நன்றாகத் தீர்மானிக்கவில்லை.

மனித உரிமைகள் மீதான இந்தக் கொடுமைகளின் முரண்பட்ட கருத்துக்களும் கண்டுபிடிப்புக்களும் இவ்வுண்மையை உலக மேடையில் எமது அதிகாரிகளுக்கு உணர்த்துகிறது.

THE TORONTO SUN (16th sep'86) எனும் கனடியப் பத்திரிகையில் வெளிவந்து அதனை மறுபதிப்புச் செய்த Tamil Times க்கு நன்றி.

---

## ✧ மாசி மாத விசேட தினங்கள் ✧

2ம் தேதி (திங்) – சதுர்த்தி விரதம்
4ம் தேதி (புதன்) – சஷ்டி விரதம்.
6ம் தேதி (வெள்ளி) – கார்த்திகை விரதம்
11ம் தேதி (புதன்) – பிரதோச விரதம்
12ம் தேதி (வியா) – தைப்பூசம், விஷ்ணுபதி புண்ணியகாலம்
13ம் தேதி (வெள்ளி) – பூரணை விரதம்
25ம் தேதி (புதன்) – பிரதோச விரதம்
26ம் தேதி (வியா) – மஹா சிவராத்திரி விரதம்
28ம் தேதி (சனி) – அமாவாசை விரதம்.

---

கோவில் எவ்வளவு அழகாக இருந்தாலும் ஆண்டவன் குடியிருக்கும் மூலஸ்தானம்தான் பக்தர்களை ஈர்க்கிறது. அதுபோல ஒரு பெண்ணின் உடலழகை விட அவள் மன அழகுதான் குடும்ப வாழ்வில் கணவனை இதமாக ஈர்க்கிறது.

www.padippakam.com

தென்றல் வழங்கிய இலக்கியப்போட்டி கடந்த மாத இதழில் இடம்பெற்றது. ஆனால்---- அதில் எமக்கு ஏமாற்றமே கிட்டியது. மூவரைத் தவிர... வேறு எவருமே அதில் கலந்து கொள்ள முன் வராதது எமது துரதிஷ்டமா?........ அல்லது தமிழ் இலக்கிய உலகுக்குக் கிடைத்த ஏமாற்றமா? என்பது தெரியவில்லை.

இருந்தபோதும், போட்டியில் கலந்துகொண்ட மூவருக்கும் 'தென்றல்' பரிசுகளை வழங்கிக் கௌரவிக்கிறது.

சிறு கதைக்கான பரிசைத் தட்டிக் கொள்பவர்

எஸ்.ஜெ.சேகர்
KRACHT STR. 23
163, BOCHUM-7

கவிதைக்கான பரிசுகளைத் தட்டிக் கொள்பவர்கள்

முறையே, திருமதி. தனலக்சுமி. குகநாதன்
DÜSSELDOFER STR – 192
4005 MEERBUSCH.7

திருமதி. கோசல்யா. சொர்ணலிங்கம்
GNEISENAU STR 61
4330, MÜLHEIM. A.D. RUHR.

அத்துடன் - இவ்விதழில் அவர்களின் பரிசுபெற்ற ஆக்கங்கள் இடம்பெறுகின்றதென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

இங்ஙனம்,
வெளியீட்டாசிரியர்.

# வீதியோரம் வீசப்பட்ட அபலைப்பெண்

: எஸ். ஜே. சேகர்:

நேரமோ நள்ளிரவை நெருங்கிக் கொண்
டிருந்தது. வீதியில் மனித நடமாட்டம் குறைந்து விட்டிருந்த
கோட்டான்களும், ஆட்காட்டிகளும் ஆதிக்கம் செலுத்தத் தொட
ங்கியிருந்தன. பேய்களும், நாய்களும் உலாவரத் தொடங்கி
விட்டன. இந் நேரத்தில் கிராமத்தின் ஒரு கோடியில் விளக்
கம்பத்தின் கீழே எவரின் வருகையையோ எதிர்பார்த்துக் காத்
திருக்கின்றாள் விஜயா. அவளின் வாழ்க்கைக்கு அனுதாபப்
படுவது போல் அந்தத் தெரு விளக்கும் கண்ணைச் சிமி
ட்டிய வண்ணம் அழுது வடிந்துகொண்டிருந்தது.



இவ்வா ருக்கும் தெரிந்த ஒரு -
தாயம் அவளுக்கு இட்ட பெயர் "விபச்சாரி".
இவளிடம் வரும் பணபல ளர்களின் பின்தான்
அவர்களின் பட்டப் பெயர் கள் ஒட்டி இருக்கு
எம்.ஏ, பி.ஏ, பி.எஸ்.சி, ஜே.பி என்றெல்லா
ஆனால் அவர்கள் இவளி ன் பெயரின் முன்
னால் அல்லவா இவளின் பட்டத்தைச்
சூட்டிவிட்டனர். ஆமாம் அவளின்
பெயர் "விபச்சாரி விஜயா".

இவளும் நினை
தெரிந்த நாளிலி ருந்து
தானும் கண்ணகி யாக,
நளாயினியாக வாழ வேண்
என நினைத்தவள் தான்
ஆசைப்பட்டவள் தான் அப்-
பொழுது அவளுக்கு த்
தெரியாது விதி இப் படித்
தன் வாழ்வில் கோ ரப
ப்பற்களை விரித்துத் என்று
தாண்டவம் ஆடுமென அ

அரக்கர்கள் க்
கினி குண்டம் வளர்
க்கட்டி மேளம் முழங்க
சுற்றமும் உறவினரும்
அட்சதை தூவிய
சுமங்கலிப் பெண்கள்

ஆரத்தி எடுக்கக் கரம் பிடித்தவனுடன் புதுவீடு புகுந்தவள்
தான். அந்தணர்கள் பார்த்த சுபமுகூர்த்தத்தில் தான்
இவளது சாந்தி முகூர்த்தமும் நடந்தது. அந்த சாந்தி
முகூர்த்தமே இவளது சாந்தியை இழக்கும் முகூர்த்த-
மாய் அமையும் என எவருமே எதிர்பார்த்திருக்கமுடி-
யாது. விதி வலியது என்பதை வலியுருவில் வந்து நிரூபித்து
விட்டது. ஆமாம் இவள் கணவன் இவள் எதிரிலேயே
கதறித் துடிதுடித்து இறந்தான்.

மணமாலைகள் பிணமாலைகள் ஆயின.

கரங்களில் சரசரத்த வளையல்கள் கதறக் கதற உடைத்
தெறியப்பட்டன. நேற்றுப் பல்லக்கில் மணமகளாக ஊரை
வலம் வந்தவன் இன்று பிணமாக பாடையில் வலம் வருகி
ன்றான். ஒரே ஒரு நாள் சுமங்கலியாக வாழ்ந்தவள் இன்று?
..... அந்தப் பிண வீட்டின் ஓர் மூலையில் இரு பெண்கள்
பேசிக் கொண்டனர். "பெட்டைக்கு ஏழுச் செவ்வாயாம்.
தமையன் மூடிமறைத்துச் செய்து வைத்தான். பாதகியே
இவளின் தாலிக் கயிறே அவனுக்கு பாசக்கயிறாகிவிட்டது."

சிறு வயதிலே பெற்றோரை இழந்து அண்
ணனின் நிழலில் வாழ்ந்த விஜயா அழகில் பக்தாத பேர-
ழகியல்ல. எனினும் கண்டோரைத் திரும்ப வைக்கும் வசீ-
கரமிருந்தது முகத்தில். பொது நிறம். உடலழகு இன்னும
இளைஞர்கள் வருணிக்கும் 32, 26, 30 எனும் தையல்
காரன் அளவு அவளுக்கு இருக்கின்றது.

முதலிரவைக் கூட முழுமையாக அனுபவி-
க்காது மூலையில் இருந்து முழங்காலில் முகம் புதைத்தழும்
அவளுக்காக அண்ணன் தன் வாழ்வைத் துறந்தான். இவ
ளுக்கு மறுவாழ்வு கிடைக்காதோ என ஏங்கினான். மீண்டும்
வரன் பார்க்கத் தொடங்கினான். திருமணச் சந்தையில்
ஏலப் பொருளாய்ப் பலர் பார்வைக்கு முன் நிறுத்தப்பட்
டாள். அவள் அழகில் மயங்கிச் சிலர் முன் வந்தனர்.
முடிவில் ஏழுச் செவ்வாய் என்றதும் அவர்களுக்கும் உயி
ரின் மீது ஆசை வந்துவிட்டது.

பாவம் சபலத்துக்கும் சலனத்துக்கும்
ஆளாகும் ஒரு குழந்தை..... வயதுப் பெண் அவள்... அத்து
டன் ஒரு இரவில் கணவனால் தீண்டிவிடப்பட்ட உணர்ச்சி
----- அண்ணனால் அவள் வயிற்றுப் பசியை மட்டும் தான்
போக்க முடிந்தது. அவள் துயில் மறந்த இரவுகள் எத்தனை

www.padippakam.com

..... துடித்த இரவுகள் எத்தனையோ..... அன்னையின் அரவணைப்பான பேச்சாலும், குளிர் நீராலும் தணிக்க முடியாது போய்விட்டது அவள் உடல் உஷ்ணத்தை ஒருநாள் அவளாக வழுக்கி வீழ்ந்து விட்டாள் வாழ்க்கையில். அதனால் மெத்தையில் வாழ்ந்தவளே குப்பையில் தூக்கிப் போட்டது இச் சமுதாயம். இன்று அதுவே அவளின் வயிற்றைக் கழுவும் தொழிலாக வும் மாறிவிட்டது. இப்போது ஒவ்வோர் இரவும் ஏழு பேரைப் போல் எத்தனை பேர் வந்துவிட்டுப் போகும் ஆரோக்கியத்துடன்தான் வாழ்கின்றனர். அன்று யாராவது இரக்கம் காட்டி இருந்தால் இவளும் இலப் பெண்ணாக வாழ்ந்திருப்பாள். கோடியில் காத்திருக்கமாட்டாள். இப்போது வீதியில் வீசப்பட்ட அபலைப் பெண்களின் அவளும் ஒருத்தி.

* முற்றும் *

---

## பொங்கல் விழா

'முல்லகம்' எனுமிடத்தில் பொங்கல் விழா ('புருமன்டெவர் ஸ்ராசா' அரங்கில் நடந்த 14.1.87 புதன்கிழமை மாலை ஐந்து மணிக்கு ஆரம்பமாகி இனிதே நிறைவெறியது.

இவ்விழாவானது இந்துசமய வழிபாட்டுடன் ஆரம்பமாகிக் கலை நிகழ்ச்சிகளுடன் முடிவடைந்தது.

www.padippakam.com

# சங்கத்தமிழரன்று...... கலியுகத்தமிழரின்று

(திருமதி) தனலக்சுமி கேதாசன்

போரென்றால் – புலியாகி காதலென்றால் – பூவாகி
பாரெல்லாம் – ஆண்ட சங்ககால – தமிழரின்று
போரென்று – கிலிகொண்டு வெட்டிதனைக் – கட்டிக்கொண்டு
பாரெல்லாம் – அடிமைகளாய் அலைகின்றார் – கலியுகத்தில்
சீரெல்லாம் – அழிந்தாலும் தான் வாழ்ந்தால் – போதுமென்று
காரோட – வாங்கியின்று கடையெல்லோ – நடாத்துகிறார்.
பாராண்ட – நாகரீகம் சீர்கெட்டுப் – போயின்று
யாராண்டால் – என்னவென்று நிம்மதியாய் – தூங்குகிறார்!

முதற்சங்கம் – இடைச்சங்கம் கடைச்சங்கம் – என்றுரைத்து
முக்கூறாய் – ஆய்கிறார் இன்றுவரை – சான்றோர்கள்
எக்கூறாய் – வகுத்தாலும் எம்மவரோ – இன்றுவரை
பக்குவமாய் – சேர்ப்பது சீதனத்திற்கென்று – பணமன்றோ
தத்துவங்கள் – பலவற்றை அன்றுலகிற்கே – அளித்துவிட்டு
புத்தகங்கள் – மாற்றியின்று புதுமைபல – செய்கின்றார்
ஒற்றுமையை – இழந்துவிட்டு இன்றுமெம்மும் – தவிக்கின்றார்
பற்றுவந்தால் – ஒருவேளை திருந்தி – நடப்பாரோ?

---

ஒரு கவிதை இலக்கணவரம்புக்குட்படுகிறதா அல்லது அதை மீறுகிறதா என்பதைவிட அது ஒரு இதயத்தைத் தொட்டு அதன் ஆன்மாவை ஆர்கவிக்கிறதா என்பதுதான் முக்கியம்

# சங்கத்தமிழர் அன்று..... கலியுகத்தமிழரின்று

(திருமதி) கோசல்யா. சொர்ணலிங்கம்.

சங்கத்தமிழர் தமிழ்மொழிகாக்க தவமிருந்தான் தன்னுயிர் ஈந்தான்
மங்கா புகழ் வளர்க்க பொருள்தேட மறுநாடு ஏகினன் - இன்று
பொங்கும் இனிய தமிழ் புதியமொழியாகி - தமிழன் தஞ்சமென
தங்கும் நாடுகளில் தடுமாறி நிற்குது காண்.

வேலேந்தி வில்லேந்தி வீரப்போர் செய்தார்கள்
பாலேந்தும் பாலகனும் புறப்பட்டான் போருக்காய் - இன்று
நூலேந்தும் வாலிபரும் தன்னுயிர்காக்க தஞ்சமது கோரியதால்
செங்கோலேந்தும் ஆட்சி கொடுங்கோலாட்சியானது பார்

குற்றத்தை குற்றமென கொண்டாலே கொலைத் தீர்ப்பு
தப்பை தப்பென தரம்வகுத்தால் தண்டனை - இன்று
குற்றத்தை குற்றமென கூறுவதும் குற்றம்
தப்பை தப்பென்றால் அது தவறென்னும் தலைமையாட்சி

பெண்ணே மாதாவாக பெருமை மிகு தெய்வமாக
கண்ணகை அவதாரமாக கருதினர் சங்கத்தமிழன் - இன்று
உண்மையேதுவெனில் பெண்ணை வரதட்சணை கேட்கும்
கண்ணிழந்த கலியுகத் தமிழரை கண்ணாரக்காண்கின்றோம்

---

ஒரு உன்னதமான கவிஞன் என்பவன் பொதுவாக ஆக்கப்படுவதில்லை. அவன் பிறக்கின்றான். ஏனென்றால் அது கடவுளால் அவனுக்களிக்கப்பட்ட கொடை.

www.padippakam.com

"வீடியோ மாருதியின்";

நட்சத்திரப் போட்டி, இலக்கம் - 2 இன் முடிவுகள்



எம்மால் நடாத்தப்பட்ட நட்சத்திரப் போட்டி இலக்கம் இரண்டில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். இப் போட்டியில், சரியான விடை எழுதியோரில், வீடியோ மாருதி வழங்கும் பதிவு செய்யப்பட்ட திரைப்பட புதிய வீடியோ கசெற்றைப் பெறும் அதிஷ்டசாலி,

திரு. V.A. புவனேந்திரன்
WALKÜREN STR-37
5630, REMSCHEID
T/P:- 02191-342470

சரியானவிடை:- அச்சுவினி, பரணி, கார்த்திகை..... எனும் வரிசையில் வரும் 27வது நட்சத்திரமான "ரேவதி" என்பதாகும்.

மேலும், பரிசைப் பெறும் அதிஷ்டசாலியின் பரிசு காங்கிரஸ் -இல் அனுப்பி வைக்கப்படும்.

www.padippakam.com

# வீடியோ மாருதி
## வழங்கும்
## நட்சத்திரப் போட்டி இல:- 3



இங்கே நடிகர் விஜயகாந்துடன் இணைந்திருக்கும் இந்த நெற்றிக்குரிய நடிகை யார்? .... என்பதைக் கண்டுபிடித்து, பரிசுக் கூப்பனைப் பூர்த்தி செய்து 20-2-87-க்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வையுங்கள். பரிசுக் கூப்பனில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் மாத்திரமே ஏற்றுக் கொள்ளப்படும்.

உங்களில் அதிர்ஷ்டசாலியான ஒருவர், வீடியோ மாருதியின், பதிவு செய்யப்பட்ட நிறைபட புதிய வீடியோ 'கசெற்' ஒன்றைப் பெறும் உரிமையுடையவராகிறார்.

பரிசு பெற்றவரின் விபரம், அடுத்த 'தென்றல்' இதழில் வெளியாகும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

~ x ~

www.padippakam.com

# VIDEO MARUTY

நாடுங்கள்! வீடியோ மாருதியை ---- !

உங்கள் அபிமான வீடியோ மாருதி ஸ்தாபனத்தார் வாடிக்கையாளர்களையும், வியாபாரிகளையும் மகிழ்விக்கும் வகையில் ஒரிஜினல் வீடியோ, ஓடியோ கசெற்றுக்களையும், பதிவு செய்யப்பட்ட தரமான வீடியோ கசெற்றுக்களையும் விநியோகம் செய்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன், அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

<u>தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-</u>

MARUTY
WESTFALEN STR - 111 B,
5810, WITTEN.    T/P. NO:- 02302/64029.

---

<u>வீடியோ மாருதியின் பரிசுக்கூப்பன் இல.3.</u>

பெயர் :- ______________________

விலாசம் :- ______________________

______________________

______________________

நடிகையின் பெயர் :- ______________________

தொலைபேசி எண் :- ______________________

* தயவுசெய்து விலாசத்தை ஆங்கிலத்தில் எழுதவும்.

படிப்பகம்

www.padippakam.com

# பிறந்த தின வாழ்த்து



ராஜீவ்
(வின்றூன்)
1-2-87
இரண்டாவது பிறந்த
தினம்
பெற்றோர்கள்;
உமாகாந்தன் - சௌந்தராதேவி.

விஜெகாந்
(வின்றூன்)
7-2-87
ஆறாவது பிறந்ததினம்
பெற்றோர்கள்;
தர்மபாலன் - ஜெயா

நிஷாந்தி
(வின்றூன்)
16-2-87
முதலாவது பிறந்ததினம்
பெற்றோர்கள்;
இராஜா - ஜெயபவானி

"தென்றல்" வாசக நேயர்கள் சார்பில் எங்கள் உள்ளங்கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்

இங்ஙனம்,
வண்டிமாமா

Siva



படிப்பகம்

www.padippakam.com



ஸ்ரீஸ்கந்தனின்

# நிர்மலமான நிஜங்கள்

## 5

ஏதோ ஒரு உந்தலில் அந்த அறைக்
குள் செல்லப் புறப்பட்ட அகல்யாவிற்கு திரேசம்மா சொன்
னது ஞாபகத்திற்கு வந்தது. திரேசம்மா சொன்னது போல
ஏதாவது நடந்துவிட்டால்...? ஏன் வீணாகப் பிரச்சனையை
வளர்த்துக்கொள்ள வேண்டும். நாம் உண்டு நம் வேலை
உண்டு என்று இருப்பது பிரச்சனை இல்லை. என்றெண்ணி
அகல்யா மீண்டும் படுக்கையில் வந்து படுத்துக் கொண்டாள்.

வாழ்க்கையில் மனிதர்களுக்கு எத்தனை பிரச்சனைகள், எத்-
தனை துயரங்கள். காதல் அந்த முத்தான மூன்று எழுத்
தில் எத்தனை சுகங்கள். மாறுபட்ட ராகங்கள். ஒவ்வொ
ன்றும் வெவ்வேறு தனி சுவையைக் கொடுக்கின்றன.
சோகத்திற்கே உரித்தான முகாரி ராகம் அதனைக் கேட்
பதில் கூட ஒரு தனிச்சுவை இருக்கத்தான் செய்கின்றது.
ஆனால் தாளம் தப்பிய எந்த இராகங்களும் என்றைக்
குமே சுவை ஊட்டுவது இல்லையே....! அதுபோல்தான்
திலீப்பின் வாழ்க்கையும் தாளம் விலத்திய ராகமாக மாறி
விட்டது. அதன் விளைவுதான் இன்று திலீப்பிடம் காணும்
பிரதிபலிப்பு. வேதனைகளைத் தம்முள் அடக்கி ஞானி
போல வாழ்பவரும் உண்டு. அதனை அடக்கும் சக்தி
அற்றோரும் இருக்கத்தான் செய்கின்றார்கள்.

நாலு புறமும் சோலைபோல் வாகை


படிப்பகம்

www.padippakam.com

மரங்கள் சூழ்ந்திருக்க நடுவிலே கம்பீரமாக நின்றது கிராம நாதன் இசைக் கல்லூரி. அங்கு அகல்யா சங்கீதம் முதலாண்டு படித்துக் கொண்டிருந்தாள். வழமைபோல அன்றும் அகல்யா பாடசாலை சென்றபோது மாணவிகள் கல்லூரி முன்றலில் கூடிநின்றார்கள். அகல்யாவிற்கு ஒன்றுமே புரியவில்லை. தன் தோழியை அணுகி "ஏன்டி ஏன இன்னும் எல்லாரும் வகுப்பிற்கு செல்லாமல் இங்கேயே நிற்கிறீர்கள்" என்றாள். "உனக்கு விஷயம் தெரியாதா? இன்றைக்கு நாம எல்லோரும் யாழ் பல்கலைக் கழகம் செல்ல வேண்டும். இன்று காத்தால். ஏனென்றால் கிராணுவம் இரண்டு மூன்று, பெரிய ஆட்களையும் சில கம்பஸ் லெக்சரர்களையும் கைது செய்து கொண்டு போட்டார்களாம். அவர்களை விடுதலை செய்யத்தான் இன்று போராட்டம், பகிஷ்கரிப்பு என்று 'கம்பஸ்' மாணவர்கள் வந்து சொல்லிவிட்டுப் போனார்கள். இன்னும் சிறிது நேரத்தில் நாம் அங்கே போக வேண்டும்.

அவள் சிநேகிதி சொன்னதுபோல ஒரு தனியார் பேருந்துவந்து

அவர்கள் கல்லூரிக்கு சேர்ந்தது. அதனுள் ஏறிக் கொண்டார்கள். வளாகம் சென்று அகல்யாவிற்கு மாக இருந்தது தோ சொல்லே கொண்டிருந் சுவர்களிலே ரொட்டிகள் ஏன் இந்த போராட்டம் விளக்கிய வண்ணம் ந்தது இசைக் கல்லூரி வர்களும் வளா மாணவர்களும்



என அனே. இறந் ஒரே எல்லோ கொக

லோரும் வரும் யாழ கியதும் ஆச்சரிய மும் ஏதே மிட்டுக் தார்கள். பல சுவ- இன்று என்பது இரு மாக க



படிப்பகம்

www.padippakam.com

ஒன்று சேர்ந்து ஊர் வலம் வருவது என்பதுதான்
அவர்களின் இன்றைய செயல் திட்டம். ஒலி பெருக்-
கியில் இருந்து ஒரு குரல் அனைவரையும் கல்லூரி வாச-
லுக்கு வரும்படி ஒலித்தது. சகல மாணவ மாணவிகளும்
கல்லூரி வாசலில் அணி வகுத்து நின்றார்கள். அனைவ
ரின் கைகளிலும் போராட்டக் காரண விளக்க அ
டைகள் பிரதிபலித்தன.

மாணவர் தலைவன் தியாகு அங்
பிரசன்னமானான். "என் அருமைத் தோழர்களே!
தோழியரே! நாம் இன்று ஏன் இந்த ஊர் வலம்
செய்கின்றோம். இதனால் வரும் நன்மை என்ன? எ
படித்த மாணவர்களாகிய உங்களுக்கு நான் செ
விளக்கவேண்டிய அவசியம் இல்லை. நீ
புரிந்து கொண்டு இருப்பீர்கள். ஆனால் நாம் இ
அகிம்சை வழியில் நடாத்தும் இப்போராட்டத்தில்
பெறவிட்டால் நாம் அடுத்த புதுப் போராட்டம்
தவறல்ல. அரசாங்கம் இன்று தமிழ் மாணவர்களு
த்துவரும் அட்டூழியங்களை அனைத்து மக்களு
வார்கள். சிங்களப் பகுதியில் இருந்த பல
கத்தில் கல்வி பயின்ற தமிழ் மாணவர்களை
மாணவர்கள் 'ராக்கிங்' என்ற பெயரால்
சித்திரவதைகள் தந்ததன் என்ன?

இவற்றையெல்லாம் ஒருப
ங்கம் இன்று என்ன செய்கின்றது? பய
என்றும் பயங்கரவாதிகள் என்றும் தீவிரவாதிக
அவர்கள் அனைவரும் பயங்கரவாதிகளா
வாதிகளின் செயல்களால் பயங்கரவாத
இல்லை ஆக்கப்படுகின்றார்கள். நாம் எ
கேட்கின்றோம். தமிழ் மாணவர்களின் அ
கேட்கின்றோம். இன்று எம்மை
நாளை எம்மவர்களையும் துன்புறுத்து
படுவதற்கு ஒன்றும் இல்லை. என்ன
சரித்திரம் ஒன்று உருவாகுமே யா
களாகிய எம்மால் என். நாட்டின்
கள்தான். இதனை அ

www.padippakam.com

வெகு தொலைவில் இல்லை. மீண்டும் உங்களுக்கு ஒன்று
நான் சொல்கின்றேன். இருண்ட பாதையில் நாம் எல்-
லோரும் பயணம் செய்கின்றோம். பழக்கப்பட்டு விட்ட
தால் நாம் தடங்கலின்றி பயணம் செய்கின்றோம். இப்ப
யணம் நீண்டும் தொடரும்போது கடந்துவந்த பாதை
போல் இருக்காது. எப்படி இருக்குமோ தெரியாது.
தடக்கி விழும்போது உணர்வதை விட நாம் இப்போ-
தே உணர்வது நல்லது. எமக்கென்று ஒரு வெளிச்சம்
தேவை. அது நிரந்தர வெளிச்சமாகவும் தேவை.
துவே நான் உங்களுக்குச் சொல்லும் வார்த்தை
கும். இது நிறைவேற்ற என்றும் மாணவத் தலைவ
கிய நான் உங்களுடன் நின்று பாடுபடுவேன்.
தனை வலு. தியாகுவின் பேச்சில் எத்தனை உறுதி
யா. இதுமட்டுமா அவன் கூறினான். எத்த
எடுத்துக்காட்டுகள் அனைத்தும் அவன் ஆணி
ாக உரைத்தான். அவன் உரையை அடுத்து
லம் வளாக முன்றலில் இருந்து பலாலி வீதி வழி
யாழ் நோக்கி வந்து கொண்டிருந்தது. மாண
டன் மக்களும் ஆங்காங்கே இணைந்து கொ
ள். யாழ் நெருங்கும் வேளை......

~ தொடரும் ~

## வண்டு

ண்ட மயக்கம் தீருமுன்னமே
வனும் பிணைப்பை அறுக்கின்றது - வண்டு
ண்டு தன்னியல்பாய் மாறுக
ன் தன்னியல்பாகக் கூடாதே!

~ அக்கரைப்பற்றூர். ராசிக் ~



படிப்பகம்

www.padippakam.com

# எப்படியழைப்பேன் உன்னை.....?

~ அம்பலவன் புவனேந்திரன்.

கன்னியரை மயக்கிவிடும் கண்களில் - மாயக்
கண்ணனையே நான் காண்பேன் - காந்தமாய்
என்னைக் கவர்ந்துவிட்ட உன்னை
என்ன பெயர் சொல்லி அழைப்பேன்....?

சிருஷ்டிப்புகளில் சித்திரங்கள் பேசும்.
சிலைகளும் உயிர்கொண்டு ஆடும்
கலைகளின் காவலனை உன்னைக்
காதலன் என்று நான் அழைப்பேன்....?

வசந்தம் உன்பாடல் கேட்டு வரும்
வழிமாறி தென்றலும் தத்தளிக்கும்
சந்தம் சேர்ந்தே இயலும் கூடும் - என்
சிந்துஜனை எப்படி நான் அழைப்பேன்....?

கவிதைகளே உன்னுடைய வார்த்தைகள்
காலங்களை வென்று நிற்கும் - எழிற்
கோலங்களைப் படைத்துவிடுகின்ற
கவியென்று உன்னை நான் அழைப்பேன்....?

கனவுகளில் உன்னுடன் கதைத்திருப்பேன்
காலையிலே அதையெண்ணி மகிழ்ந்திருப்பேன் - என்
கண்களையே வியக்கவைத்திடுகின்ற
கண்ணாளனை எப்படி நான் அழைப்பேன்...?

மலர்க் கணைகள் தொடுத்து வருகின்ற
மன்மதனின் சுந்தரம் உனக்கு - என்
தளிர்க்கரம் பற்றவரும் உன்னைத்
தமிழாலே என்ன சொல்லி அழைப்பேன்....?

www.padippakam.com

**இடமிருந்து வலம் →**

1-6) வால்மீகி எழுதியது இது.

7-9) மனதில் ஏற்படக்கூடிய இது இங்கு குழம்பியும் முடிவுறவில்லை.

15-18) ஒரு மலரையும், மாத சஞ்சிகை ஒன்றையும் குறிக்கும் இது இங்கு வலமிருந்து இடமாகக் காணப்படுகிறது.

19-20) குரங்குக்கு இப்படியும் ஒரு பெயர்

22-24) மும்மலங்களில் ஒன்றான இது இங்கு முடிவுறவில்லை.

27-30) இதில் திறமைசாலிகளாகச் சிலர் இருக்கிறார்கள். இது இங்கு குழம்பிக் காணப்படுகிறது.

31-36) பஞ்சபாண்டவர்களின் கதையைக் கூறும் இது இங்கு வலமிருந்து இடமாகக் காணப்படுகிறது.

**மேலிருந்து கீழ் ↓**

1-31) புதுக் கவிதைகள் என்பன பெரும்பாலும் — எனும் வரம்பை மீறுகிறது.

2-8) பொதுவாக மக்கள் இந்தக் கலையைச் சார்ந்தவர்கள். ஆனால் இங்கு தலைகீழாகியும் முடியவில்லை.

3-15) இது உயிரைவிட மேலானது.

27-33) எந்தப் பொருளை வாங்குவதாயினும் இது முக்கியமான ஒன்று. ஆனால் அது இங்கு முடியவில்லை.

16-34) சாதகம் என்பதற்கு எதிர்ச் சொல் இது இங்கு குழம்பியுள்ளது.

17-35) மாற்றான் மனைவி மீது ஒருவனுக்கு ஏற்படும் இச்சையால் அவன் இப்படி வர்ணிக்கப்படுகிறான். இங்கு குழம்பியுள்ளது.

6-36) மன்னர்கள் ஆளும் இது இங்கு தலைகீழாயுள்ளது.

தேர்வு செய்து மேலுள்ள படிவத்தைக் கத்தரித்து அப்படிவத்திலேயே உங்கள் சரியான விடைகளை எழுதியனுப்பி வைக்கவும். மேலுள்ள படிவத்தில் நிரப்பப்படாத எந்தவொரு விண்ணப்பமும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. இப்போட்டியில் வெற்றிபெறுபவர்களில் அதிஷ்டசாலியான ஒருவர் "தென்றல்" வழங்கும் 10 மார்க் பரிசுக்கு உரித்துடையோராவர். சரியான விடைகள் அனுப்பியோரது பெயர்கள் அடுத்த வெளியீட்டில் பிரசுரமாகும். உங்கள் சரியான விடைகளை இதழாசிரியரின் கையில் கிடைக்க அனுப்பி வைக்கவும். போட்டி முடிவுத் திகதி :- 20.2.1987

படிப்பகம்

# 5

'தீ...!'

— எல்லாவற்றையும் எரித்துச் சாம்பராக்கி விட்டு தணிந்துபோகிற தீ.... இப்போது பாலாவின் மனத்திலும் அப்படி ஒரு தீ!

இந்தத் தீயின் வெம்மை தாளாமல் அவன் தவிக்கிற போதெல்லாம் அவனுக்கு ஆறுதல் சொல்கிற ரஞ்சன் இப்போது அந்தத் தீயை மூளவிட்டு அமைதியாய் இருந்தான்....

அப்பா... அம்மா.... தங்கச்சி என்று இவனுடைய இரத்த உறவுகள்.... சொந்த மண்ணிலேயே அகதிகளாய்...?

'நீயாவது எங்கேயாவது ஓடு... நிம்மதியைத் தேடு...!' என்ற அம்மா...

'நீ பிறந்த இந்த நாட்டுக்கு உன்னால் ஏதாவது செய்ய முடியுமா என்று பார்... சுதந்திரமில்லாமல் சோறும் இல்லே!' என்று சொல்லி வழியனுப்பிவிட்ட அப்பா.

'தமிழ்ப் பெண்கள் சமுதாயமே அழிந்தாலும் சீதனக் கொடுமை மட்டும் அழியவே அழியாது!' என்று சொல்லாமல் சொல்வதுபோல் —

'என்னையும் மறந்து விடாதே அண்ணா!' என்று அழுது விடை தந்த தங்கை....!

— அகதிக் கோலத்துடன் நாட்டைவிட்டுப் புறப் பட்டபோது 'எவ்வளவோ சாதிப்பேன்!' என்று எண்ணிக்கொ- ண்டு புறப்பட்ட இவன் மனம்.... இந்த வெள்ளைத் தோல் மனிதர்களிடையே வந்து அடைக்கலம் கோரிய பிறகு எப்படி எல்லாம் மாறிப் போய்விட்டது....

சொந்த நாட்டின் துயரங்கள்...

அங்கே எழுகின்ற மரண ஓலங்கள்....

'இவைகளெல்லாம் அன்றாடச் சங்கதிகள்தானே!' என்கின்ற ஒரு அங்கலாய்ப்பு.... 'நடப்பது நடக்கட்டும். நாம் என்ன செய்வது?' என்கின்ற ஒரு ஒதுங்கல் மனப்பான்மை-- ... சொந்த நாட்டை மறந்துவிட்டு இங்கே சுகம் காண வைக்கிற மனப்போக்கு....

'சுலோ....!'

— அவள் மட்டும் இவன் வாழ்வில் குறுக்கிடாமல் இருந்திருந்தால் ஒன்றில் இவன் ஒரு மனநோயாளியாகி விடுப்பான்... அல்லது ஒரு ஞானியாகியிருப்பான்...

www.padippakam.com

'காதல் என்பது கூட ஒரு மனநோய்தான்!' என்று இப்போது இவனுக்குப் பட்டது.....

இவனுடைய மனநோய்க்கு மருந்தாக இருந்தவள் சுலைன் .... அவளுடைய பருவம்...

இப்போது —

அவள் இல்லை...

'எது வாழ்க்கை' என்று அவன் எண்ணிக் கொண்டானே ..... எந்த வாழ்க்கையில் இனிமை நிறைந்திருக்கிறது என்று அவன் உணர்ந்தானே..... 'அதுவே பொய்' என்று இவனுக்குப் புரியவைத்துவிட்ட மாதிரி.....

சுலைனா மண்ணுக்குள் மறைந்து போனாள்..

இனி...

மறுபடியும் இவன் தன் வாழ்க்கையைப் புதிதாக ஆரம்பித்தாக வேண்டும்....

'இனி ஒரு காதல்... திருமணம்.... குடும்பம்....?'

— அந்த நினைவே இவனால் சகிக்கமுடியாததாயிருந்தது..

'வேளா வேளைக்குச் சாப்பாடு..... வெடிச் சத்தங்கள் கேட்காத நிம்மதியான தூக்கம்.... போதாக் குறைக்கு எவளாவது ஒருத்தியின்ர கூட்டுறவு.... இவ்வளவும் தானே வாழ்க்கை....! இதிலேயே சந்தோஷப்படுகிறதாய் இருந்தால் எவ்வளவு காலத்துக்கு நீ சந்தோஷப்படமுடியும்...? எவ்வளவு காலத்துக்கு நீ சலிப்பில்லாமல் வாழ முடியும்....?'

— ரஞ்சனின் கேள்வி இவன் மனதைக் குடைந்தது..

நியாயமான கேள்விதான்....

ஆனால் ரஞ்சன் சொன்ன இந்தளவும் தானே வாழ்க்கை.... இதைவிட வேறென்ன வாழ்க்கை.....?

ஆனால் — இந்த வாழ்க்கையையே அடையமுடியாமல் .... அன்றாடம் தத்தளிக்கின்ற எத்தனையோ ஜீவன்கள்...

— பாலாவின் மனதுக்குள் ஒரு உண்மை உறைத்தது..

துப்பாக்கியும் கையுமாய்.... சொந்த மண்ணின் சுதந்திரத்துக்காக உயிரைப் பணயம் வைத்துக் கொண்டிருக்கிற வாலிபர்களை நினைத்துப் பார்த்தான்...

'அவர்களுக்கும் பருவம் இல்லையா.... உணர்ச்சிகள் இல்லையா.... இந்த வாழ்க்கையின் பற்றுதல் இல்லையா.... இருக்கிறது .. எல்லாம் இருக்கிறது.... ஆனால் அவர்கள் சொந்த மண்ணின் சுதந்திரத்துக்காகத் தங்களைப் பணயம் வைத்துக் கொண்டவர்கள்.... உடலைவிட உடலின் விளைவான ஆசைகளைவிட உயரிய இலட்சியத்தைப் பெரிதாய் நினைப்பவர்கள்....!'

"என்ன பாலி நீ... — உடம்புக்குள் தானே மனம் இருக்கிறது.. உடம்பு இருக்கிறவரைதானே மனம் வாழமுடியும்...?



படிப்பகம்

உலகத்தில் வாழ்கின்ற எல்லோரும் உடம்பால்தானே வாழ்கிறார்கள்? பசி, காதல் என்கின்ற சங்கதிகள் எல்லாம் உடம்பினால்தானே? இந்த உடம்பு இல்லாவிட்டால் எதுவுமே இல்லையே...

— என்றோ ஒருநாள் செல்வன் எழுப்பிய கேள்விகள்....

'உடம்புக்காக வாழ்கின்ற வாழ்க்கை வேறு... உடம்பினை வாழ்கின்ற வாழ்க்கை வேறு... இந்த உடம்பை எந்தக்கணத்திலும் சுதந்திர வேள்வித் தீக்குப் பலி கொடுக்கத் தயாராயிருக்கிற இளம் வீரர்கள்... இவர்கள் உடம்புக்காக வாழவில்லையே... போராட்டக் களத்தில் அவர்கள் தங்கள் உடம்பைத் துச்சமாய் மதித்துத்தானே போராடுகிறார்கள்...?'

அறைக்குள் வந்ததும் —

கடிதத் தாள்களும் பேனாவுமாய் உட்கார்ந்த பாலாவை அதிசயமாய்ப் பார்த்தான் ரஞ்சன்....

"ஆருக்கடா கடிதம்?"

"ஊருக்கு!"

"என்ன எழுதப் போறாய்?"

"ஊருக்குத் திரும்பி வாறதாய் எழுதப் போறன்!"

"மடையா!" என்று அவனைக் கடிந்து கொண்டான் ரஞ்சன்..

"கணநேரத்து உணர்ச்சியளுக்குத் தக்கமாதிரி மனதை அடிக்கடி மாற்றிக் கொள்கிறதுக்குப் பேர் இலட்சியம் இல்லையடா.... அதை முதலில் புரிஞ்சு கொள்.... செல்வன் உயிரோடை இருக்கிற வரைக்கும் உனக்கு உன்ரை நாட்டின்ரை ஞாபகமே வரேல்லை... இப்ப அவன் செத்த பிறகு திடீர் ஞானோதயம்.... நீ இப்ப ஊருக்குப் போய் என்ன செய்யப் போறாய்....! உன்னாலை போராட முடியாது...!"

"ஏன் முடியாது?" என்று திருப்பிக் கேட்டான் பாலா.

"போராட்டம் என்கிறது துப்பாக்கி ஏந்திறது மட்டுமில்லை... எதிரி எங்களை எந்தெந்த வழிகளாலை பலவீனப்படுத்தப் பார்க்கிறானோ அந்தப் பலவீனங்கள் ஏற்படாமல் எங்கட மக்களைப் பாதுகாக்கிறது கூடப் போராட்டம்தான்.... புரட்சி துப்பாக்கியிலை மட்டுமில்லை..., மண்வெட்டியிலையும், பேனாவிலையும் கூட இருக்குது...!"

ரஞ்சன் நண்பனின் தோளை மெள்ளத் தட்டிக் கொடுத்தான்... "இது திடீர் முடிவில்லையே?"

பாலா அவனுக்குப் பதில் பேசாமல் மேசைமீது கிடந்த தன் டயரியை எடுத்தான்.....

நவம்பர் 1 — 1986 திகதியைப் புரட்டினான்...

எழுதினான்.....


'என் சுலைனா!....

இன்று உன் மலர்மேனி மண்ணுக்குள் புதையுண்டு போன நாள்... உன் மலர்மேனி மட்டுமல்ல... என் உடம்பின்மீது எனக்கிருந்த பற்றுதல்களையும் நீ உன்னோடு மண்ணுக்குள் கொண்டு போயிருக்கிறாய்.... மறுபிறவி உண்டென்பதில் உனக்கு நம்பிக்கை உண்டோ இல்லையோ ...... எனக்கு நிச்சயமாக உண்டு....இனி எந்த ஜென்மத்திலும் உன்னைத்தவிர வேறொருத்தி என் மனத்தில் இடம்பிடிக்கப் போவதில்லை..... என்னுடைய இந்த உடம்பை இனி நான் எவரிடமும் கொடுக்க மாட்டேன் .....ஏனெனில், இந்த உடம்பை என் தாயகத்துக்கு நான் காணிக்கையாக்க வேண்டும்......!'

- முற்றும் -

---

## கருமியான காதலன்




காதலி:- "அத்தான் இடைவேளையில் மாத்திரம் வந்து என்னுடன் பேசிவிட்டு ... வெளியே போய் விடுகிறீர்களே! ஏன் நீங்கள் படம் பார்க்கவில்லையா?

காதலன்:- அன்பே!....... உனக்கு நான் ஒரு முதல் வகுப்பு ரிக்கற். ஆனால் எனக்கு..... கலரி ரிக்கற் அல்லவா எடுத்தேன். அதனால்தான்.

காதலி:- ? ?

www.padippakam.com

# PAJEETH VIDEO CENTER



திருமண வைபவமா - பிறந்த தினமா?

இன்றே தொடர்பு கொள்ளுங்கள்.......

BLUMENDALER STR-31,
4330, MÜLHEIM. A.D.
- RUHR,
B.R.D.

T.P. NO:- 0208/497322



OPERATER :-
MR. DURAI SAMY

www.padippakam.com

# துடுப்பிழந்த ஓடம் ஒன்று

குறுநாவல்

:- ஜீவிதவேன் -:

ஆறு ஆண்டு வாழ்க்கையின் இறுதிப் போராட்டம்
அன்று அவர்களுக்கிடையே நடந்தது. என்ன நடக்கிறது என்று புரியாமல் தா
யின் இந்தாளை பிடித்துக்
அந்த ஐந்து வயது நிரம்பிய சிறு
தம் சுமந்து பெற்றெடுத்த தென
விட்டுக் கொடுப்பாளா தன்
வெற்றியும் அவன் பக்கமே.
வழி செல்கிறனோ என்று திடுக்
கிடன்றாள். ஆனால் அவளால்
இனி ஏது செய்வது என்று சற்றும்
பிள்ளையைப் பார்த்தாள். ஊம
கப் பார்க்க அந்தக்
கிளேசமாகத் தட்டுப்
விட்டது. அவளுக்கு
கல்யாணம் இருந்தும்,
தொடராத வாழ்க்
கைத்து மடியவதும்
முடியாத காரியம்;
அவள் நினைத்தாள்.
ளையும் மீறி ஒரு
விம்மல் வெளியே
வந்தது. அவளின்
சந்தன முகம் கீழ்
நோக்கிக் கவிழ்ந்தது.
தனக்கு இல்லாவிட்டா
லும், தன் பிள்ளைக்
காவது வாழ்ந்தே
தீரவேண்டும் வைரா ங்கியம்
கொண்டாள். இப்பொழுது சலனம்
சிறிது கூட அவளிடம் இல்லை.
கம்பிகளாக இறங்கிய கண்ணீர்
அவளது மெல் புடவைகள் எல்லாம்
நனைத்து இருந்தது. மீண்டும்
தன் பிள்ளையைப் பார்த்தாள்.
அதற்குள் அவள் பார்வை
மறைந்துவிட்டது. நீர் மீள
மீளவென வழிந்தது.
துயரம் தெரியாமல்
வளர்ந்த அவளுக்கு

கொண்டு வேடிக்கை பார்த்தா
பாலகன் தினேஷ். பத்துமா
அவனுக்கல்லவா தெரியும்.
செல்வத்தை. இறுதியில்
நாட்டிய புருஷன் தன
இற்றான். தட்டு நிறுத்த
முடியவில்லை.
புரியாமல
றுப் பார்
கோலம
பட்டு
மாந
இனி
கை
இன்
ள
அ



இன்றைய சுமை பெரும் சுமையாகத் தெரிந்தாலும், தன் பிள்ளை நிலையை ஒரு உயர்வான இடத்தில் வைக்கவேண்டும் எனத்திடம் கொண்டது அவள் மனம்.

நாட்கள் பல நகர்ந்தன. இன்னல்கள் பல. அனுபவிக்கும் அவளுக்கு ஆறுதல் கூறக்கூட அவள் சொந்தங்கள் வரவில்லை. அவள் தன் பிள்ளையை எடுத்துக் கொண்டு தன் பிறந்த வீட்டுக்குச் சென்றாள். அங்கு ஆதரிக்க யாருமே இல்லை; அவளுக்கு. பெற்ற அன்னை இன்று இருந்திருந்தால் இந்நிலை அவளுக்கு ஏற்படுமா? ஏங்கியது அவள் மனம். சொத்தோடு சென்றிருந்தால் சொந்தம் கொண்டாட ஆயிரம் பேர் வந்திருப்பார்கள். இன்று, அவள் வெறும் கைதானே! அவளை அரவணைக்க எந்தக் கைதான் உண்டு; அவளுக்கு. திரும்பி, தன் வீட்டுக்கு வந்தாள். தனிமை அப்போது அவளுக்குப் பெரிதாகத் தெரியவில்லை. பட்டினி கிடந்தாவது, தன் பிள்ளையை ஆளாக்கவேண்டுமென நினைத்தாள். அந்த நினைவோடு சில மாதங்கள் சென்றன. அவள் கையிலிருப்பு கட்டி நாலுரூபாய்தான். இப்போதுதான் வாழ்வின் சுப்பாத்தி நிலைப்புக்கள் அவள் மனதில் தட்டுப்படத் தொடங்கின. தான் கற்ற கல்விக்கு ஏற்ற வேலை தேடி தினம் இரண்டு மூன்று இடங்கள் சென்றாள். யாரும் வேலை கொடுக்கவில்லை. ஆனால் அவள் சென்ற இடமெல்லாம் எத்தனை இடையூறுகள். எத்தனை ஏமாற்றங்கள். தற்பொழுது அவள் வைப்பணமும் செலவழிந்தபின் தன்னிடமுள்ள தாலிதான் உதவத் தொடங்கியது. அன்று அவளுக்கு வேலியாக இருந்த தங்கத் தாலி இன்று அவளுக்குத் தீனியாகியது. இந்தப் பணமும் தீருமுன் தான் ஒரு வேலையில் சேரவேண்டும் என ஆசை கொண்டாள். அவள் ஆசைக்கு ஏற்ற வேலை கிடைக்கவே இல்லை. வேலை தேடி களைப்புற்று வரும் போதெல்லாம் அவளுக்குத் தென்பு கொடுப்பது தன் பிள்ளை நினைவின் புன்னகை ஒன்றுதான். கடைசியில் வேலைதேடி எதிர்வீட்டுக் கோகிலையைச் சந்தித்தாள். அவளைக் கண்டதும் அவன் மனம் சஞ்சலம் கொண்டது. இவளா வாழ்க்கையில் மதிப்பில்லாத பொக்கிஷம். இவள் கண்கள் இரண்டும் எழுதமுடியாத சித்திரங்கள். அதில் எத்தனை எத்தனை ஒளிகள் இருந்து விளையாடுகின்றன. அவன் தன் நினைவுகளில் இருந்து விடுபட்டு எனக்கென்று ஒன்று உள்ளபோது, மாற்றான் மனைவிமீது ஒரு ஆசையா எனத் தன்னைத்தானே நொந்து கொண்டான். அன்று விடுமுறை நாளாக இருந்தபடியால் மறுநாட்காலை வரும்படியும், வீட்டு வேலையுடன் தன் பிள்ளையையும் பராமரிப்பதே அவளுக்கு வேலையாகக் கொடுத்தான் கோபி. ஏனெனில் அவர்களிருவரும் வேலைக்குச் செல்பவர்களாக இருந்தார்கள்.

மாதங்கள் பல மறைந்தன. அவள் ஒரு நல்ல குடும்பத்தில் பிறந்தவள். இதனால் தன் மானத்துடன் வாழத் துடித்தாள். கையேந்திப் பிச்சையெடுத்தாலும், தன் சொந்தத்திடம் இனிக் கையேந்துவதில்லை என நினைத்தாள். ஏனெனில் நிழல் கிடைக்கும் என்று எதிர்பார்த்து ஏமாற்றம் அடைந்தவளாயிற்றே. இன்று அவள் துன்பத்தின் எல்லையையும் நன்கு அறிந்தாள். இப்பொழுது அவள் முகத்தில் ரேகைகளாக தோரணங்களை விளக்கி யாவும் சென்றன. அவள் முகத்தில் ஒரு இயல்பான வெளிச்சம் அஸ்தமனமாகி இருந்தது. அன்று கலைவாணி என்று சொல்லக் கொண்டு வீடுவந்து சேர்ந்த அவனை, வீட்டின் "கோகிலாநீ

www.padippakam.com

பெல்லே" அழுத்தினான். "காலிங் பெல்" சத்தம் கேட்டு விரைந்து சென்று கதவைத் திறந்தாள் வாணி. திறந்தவள் "என்ன இன்னைக்கு இவ்வளவு நேரத்தோட வந்திருக்கீங்க. ஏன் உடம்புக்கு ஏதும் சுகம் இல்லேயா!" என்று பணிவான குரலில் கேட்டாள். அவன் நிமிர்ந்து பார்த்தான். ஒரு நந்தினி தேவதைபோல் நின்றாள் அவள். ஒருவித உல்லாச முகம். கண்களில் உணர்ச்சிக் கூடு. மிருதுவாகத் துடிக்கும் இதழ்களுடன் நின்றாள் அவள். "ஆமாம் வாணி. அதுதான் இன்னைக்கு லீவு போட்டுட்டு வந்திட்டேன்" என்று சொல்லியவாறு ஒரு சோபாவில் அமர்ந்தான் கோபி. வாணி ஒரு நாற்காலியை பிடித்தவண்ணம் நின்றாள். விதி விசித்திரமாய வேலை செய்ய ஆரம்பித்தது. வனப்பான தேகம். ஒரு உள் வாளிப்பு உடலுறவை வெளியே வந்து விளம்பரமாகியது. அவன் திணறினான். "ஏன் வாணி உனக்கு இவ்வளவு அழகிற்கு இன்னொரு கல்யாணம் செய்துகொள்ளலாம் தானே!" "இதை நீங்க இலகுவாகச் சொல்றீங்க. இதற்கெல்லாம் சமூகத்தில இன்னும் பரிகாரம் வரவில்லையே!" என்று சொல்லி முடித்தாள் வாணி. அதில்தான் எவ்வளவு ஏளனம். அவள் தொடர்ந்தாள் "எங்க தலைமேல எத்தனையோ நூற்றாண்டுகளாக வந்த களங்கம் இன்றும் அழுத்தி உட்கார்ந்திருக்கிறது. அவைகளைத் தள்ளி விட்டு விடுதலை அடைய எங்களுக்கு ஏது திறன். நாங்க எல்லோரும் பாவப்பட்ட ஜென்மங்களாச்சே...." "வாணி வாழ்க்கையில உங்களைப் போன்றவர்கள்தான் இயல்பாக எழும் ஆசைகளையும், வேட்கைகளையும் வெளிக்காட்டமுடியாமல் தவிப்பவர்கள்" என்றான் கோபி. அவள் நிமிர்ந்து பார்த்தாள். அவனால் தொடர்ந்து அவளைப் பார்க்க முடியவில்லே. நாணம் அவனைத் தடுத்தது. பார்வையல்ல அது. அவனுக்குள் பாய்ந்த மின்னல் அது. உள்ளே அவன் ஆத்ம ஆழத்தில் எதுவோ அடிபட்டது போல இருந்தது. "வாழ்க்கையில் ஊனமுற்றவர்களின் தாபத்தை இப்ப உங்க கண்கள் காட்டிக் கொடுக்குது. இதை அறிந்துதான் சொல்றேன். வெளிப்பூச்சு வாழ்க்கையைத்தான் வாழ்க்கை என்று நினைப்பது தப்பு இல்லேயா வாணி" என்றவன "எனக்கு கொஞ்சம் தண்ணீர் எடுத்துவா வாணி" என்றான் கோபி. அவன் மனம் நிலைகொள்ளவில்லே. அவனது மௌனம் கனமாக இருந்தது. அடுக்கடுக்கு பெருமூச்சு விட்டான். அவள் தண்ணீர் கிளாசை அவனிடம் நீட்டினாள். அவன் அவள் கையையும் சேர்த்துப் பிடித்தான். அந்தக் கணத்தில் உணர்ச்சிகள் அத்தனையும் வெளியே உதிர்ந்தது போல பிரமை ஏற்பட்டது அவனுக்கு. அவன் கண்களுக்கு அவள் ஒரு மனித ஜீவனாகத் தென்படவில்லே. மாறாக உன்னத மது பூரணமாகத் ததும்பி நிற்பது போன்ற காட்சிதான்பட்டது. அவள் அவயவங்களில் உடல் முழுவதும் ஒரு மொய்க்கும் மோகனம், ஒரு மிருதுவான மலர்வளைவு. அவன் ஒரு நீண்ட சுவாசத்தை விட்டான். அவள் கண்கள் கிறீச்சிட்டு நடுங்கின. தயங்கித் தடுமாறி "என்னை ஒன்றும் பண்ணிடாதீங்க. நான் மானத்தோட வாழ விரும்புறன். என்னை விட்டுடுங்க." என்றவள் அவன் பிடியிலிருந்து விடுபட முயற்சித்தாள். ஆனால், அவன் விட்டபாடு இல்லே. அவன் இறுக்கம் மேலும் பலமானது. அறுந்த நிலையிலேயே தன் உடலைவிட்டு எங்கேயோ பறந்து விட்டுத் திரும்பி வருவதுபோல இருந்தது அவனுக்கு. "உங்களைக் கெஞ்சிக் கேட்கிறேன். என்னை விட்டுடுங்க. என் ஆசைகளும், கனவுகளும் என்னோட அழியட்டும். அதைத் தோண்டிவிட்டு வேடிக்கை பார்க்க



படிப்பகம்

விரும்பாதீங்க" என்று மன்றாடினாள் வாணி. ஆனால் அவன் சொன்ன எதுவுமே அவள் காதில் நுழைந்ததாகவில்லை. மாறாக அவன் கைகள் அவள் உடலில் செல்லக்கூடாத இடங்களெல்லாம் சென்றன. அவள் உடலில், புது உணர்வுகள் இளம் காலைப் பறவைகள் எங்கிருந்தோ கண்காணாத தூரத்து தேசத்தில் இருந்து வருவது போல திடீரென்று வந்து நிறைந்தன. தனிமை தாங்காமலோ, தன் நிலை அறியாமலோ அவளின் ஈர இதழ்கள் மெல்லப் பிரிந்தன. அவள் தன்னையே மறந்திருந்தாள். அவள் இதயம் மில்லியன் கணக்கில் பொங்கியது. நுரைகள் ஆர்ப்பரித்து மேலே, மேலே மாடிகளாக அமைந்து எங்கேயோ உச்சங்களை அடைய முனைந்தன. அவள் குரலில் சத்தமே இல்லை. அவனது கண்கள் இரண்டும் அவளது கண் வழியே புகுந்து, இங்கும் அங்குமாய் எதையோ தேடி அலைந்தன. அவளும் அவன் கண்ணில் மிருதுவாய் நிலைத்து இருந்தாள். அவள் கண்களில் சின்ன, சின்ன நட்சத்திரங்கள் ஆயிரம் மின்னின. இமைகள் படபடக்கவில்லை. தைலம் விடுவது போல நிச்சயமாய் அவன் கண்ணிற்குள் அவள் விருந்து கொண்டிருந்தாள். எங்கெங்கோ அடிபட்டு அவன் ஒரு பாலைவனமாய்க் கிடக்க, அவள் உபசாரணை தேனாக இனித்தது அவனுக்கு. இப்பொழுது அவள் வெறும் கனவாகத்தான் தெரிந்தாள் அவனுக்கு. மேனி முழுவதும் உணர்ச்சி சமுத்திரம். கண்கள் இரண்டுமே மின்னின. உணர்ச்சிகள் பூரணமாகி இங்கும் அங்கும் வெளிச் செல்லத் திணறிக் கொண்டிருந்தன. அவள் தன் கண்களைப் பெரிதாக்கிப் பார்த்தாள். கண்கள் தான் ஆயிரம் பேசும் போது வார்த்தையில் பேசிப் பயன் என்ன. நீண்ட நேரத்திற்குப் பிறகு அவர்கள் இறுக்கம் தளர்ந்தது. அவள் சுயநிலைக்கு வந்த போது, தன்நிலை கண்டு தன் தவறை உணர்ந்தாள். கண்கள் கண்ணீரைப் பொழிந்தது. அவள் அழுகைகூட அவனுக்கு என்ன அழகு. முகத்தில் சின்னச் சின்னத் ததும்பல்கள். ஒரு ஓவியம் அழுகிறது போல இருந்தது அவனுக்கு. "என்ன வாணி சின்னப் பிள்ளை மாதிரி அழுகிறாய்" என்று கேட்ட கோபி அவளின் கண்ணீரைத் துடைக்க முற்பட்டான். "என்னைப் போல அபலைகள் எத்தனையோ விதவிதமான பின்னணிகளில் இருக்கும்போது எங்கள் மனங்களை மட்டுமல்ல, மானத்தையும் கட்டிக்காக்க வேண்டி இருந்தது. இப்ப அந்த மானமே போனபோது நான் என்ன சொல்ல. அன்றைக்கு கேட்டீங்க ஏன் கோட்டுக்குப் போகலே என்று. இன்று சொல்கிறேன். என்னுடைய அந்தரங்க அவலத்தை கோட்டுக்குக் கொண்டுபோய் அதை அரங்கேற்றி அதற்குக் கூலியா அவன்கிட்ட வாங்க வேணும். இல்ல இப்ப என் அறிவு கெட்ட தனத்தால நான் செய்த தப்புக்கு இனி நான் [illegible] இந்த வேதனையை அனுபவிக்க வேணும். அதுக்குள்ள என் வாழ்நாளில் பாதிப் பங்கு போயிற்று. இனி அழுகைக்குத்தான் ஏது இடம். என் கண்களில் இருந்து கடைசிச் சொட்டு நீரும் வழிந்திற்று. இனி என் கண்களில் ஏது நீர். சோரம் போன பெண்டாட்டி என்றுமே ஒரு விதத்தில "ஸ்ரேற்றங் சிம்பிள்" தான். இனி உங்களுக்கும் திருப்திதானே." என்று கேட்டாள் வாணி. இதைக்கேட்ட அவன் மனதில் உண்மைவலி பளிச்சிடுகிறது. அப்போது அவன

மனதில் தோன்றாத வலி இப்போது ஏன் தோன்றுகிறது. என்வாழ்க்கையில் என்மனைவி ஒன்றே பங்குதாரி. இன்னும் அவள்மீது வைத்திருக்கும் அன்போ, பாசமோ துளிகூட மாறவில்லை. அவளை நினைத்த மனம் இனியாரையும் நினைக்காது. அவள் முன் மற்றவர்கள் நிழல்தான். அவளுக்கு நான் எந்த விதத்திலும் துரோகம் பண்ணலாமா? என்று அவன் மனம் எண்ணியது. தன் தவறை மறைக்க ஒரே ஒரு வழி அவளை வேலையில் இருந்து நீக்குவதென அவன் முடிவெடுத்தான்.

வருடங்கள் பல கடந்தது. அன்று மாணவிகளோடு வரிசையாக் கட்டி நின்றவள், குலவிளக்காகத் திகழ்ந்தவள் இன்று தெருவிளக்காகத் திகழ்கிறாள். தாழ்ந்து வாழ்வதோ, உயர்ந்து வாழ்வதோ அவரவர் தலைவிதி. அன்று அவள் மலர்மஞ்சத்தில் தூங்க ஆசைப்பட்டாள். இன்று, மறந்துபோன அவள் உடலில் பலர் தூங்குகின்றனர். வேதனைகள் பல சுமையாக அவளுக்கு வந்தாலும் ஆண்டவன் கொடுத்த இரண்டு தோள்களை நம்பி தன் பிள்ளை நிலவின் வாழ்விற்காக சுமை சுமக்க ஒப்புக்கொண்டுவிட்டாள். இன்று அவன் கருங்காக ஆடை அணிகின்றான். நேரத்தைப் பார்க்கிறான். காலை ஏழரைமணி. அவன் விரைந்து வெளியேறினான் தாயிடம் சொல்லிவிட்டு. அவன் வாசலைவிட்டு வெளியேறியும், அவள் அவனின் கண்களில் இருந்து மறையும்வரை பார்த்துக் கொண்டிருந்தாள். தன்னையும்விட வளர்ந்துவிட்ட நிலவின் எதிர்காலம் எப்படி எப்படி எல்லாமோ அமைய வேண்டும் என்பதை அவள் தன் மனதிற்குள்ளேயே படம்போட்டுப் பார்த்தாள். அன்று நிழல் கொடுக்க யாருமில்லை அவளுக்கு. இன்று தன் ஜீவனின் நிழலாக அவனை வளர்த்து, அதன் அழகைப் பார்த்த அவள் உள்ளத்தில் இன்ப ஊற்று ஊறியது. நிலவு செல்லும் நேரமும், பெண்கள் பாடசாலையில் படிக்கும் மாணவிகள் கூட்டம் போகும் நேரமும் சரியாகவே இருக்கும். துடிப்புள்ள வயதாயிற்றே. எனவே வீதியும் அவர்களுக்குத் திருநாள்தான். அவர்களுக்குள் பலதரப்பட்ட பேச்சுக்கள். அவர்கள் சிரிப்பு முழுவதும் சங்கீத துணுக்குகள். அவை இன்பராகங்களாக நாலாதிசையிலும் தெறித்தன. இவர்களின் மத்தியில் ஒரு வானவில்லாக அவள் நின்றாள். அவள் சிரிப்பு ஒரு இனிய சுரங்கள் என்று அவன் நினைத்தான். தினம் காலையும், மாலையும் அவள் தரிசனம் அவனுக்குக் கிடைப்பதுண்டு. அவள் நினைவே அவன் உள்ளத்தின் ஓரத்தில் நிலை கொள்ள ஆரம்பித்தது.

நாட்கள் பல நகர்ந்தன. இந்த தரிசனம் குறித்து அவன் தன் நண்பர்களிடமும் சொல்லியிருந்தான். அன்று அவள் தன் நண்பிகளுடன் வரும் பொழுது இவன் நண்பன் ஒருவன் அவளைப் பேட்டி கண்டான். அவள் செய்த தப்பு தன் பெயரைச் சொன்னதுதான். இதனால், அவள் வரும் போதும் போகும்போதும் இவன் பெயரைச் சொல்லி கிண்டல் செய்வது வழமையாயிற்று. அன்று வழமைபோல அவன் 'சாந்தி' போகும் போது "நிலா நீங்கதானா அந்த மன்மதன்" என்று வழிமறித்துக் கேட்டாள் சாந்தி. அவனுக்கு என்ன சொல்வ

தன்றே புரியாமல் விழித்தான். ஒவ்வொரு நாளை நிதானப்படுத்திக் கொண்டு "என்ன நடந்தது..." என்று கிண்டலாகவே கேட்டான் திலீப். அன்று அவர்களின் பேச்சுக்கள் வாய்ச் சண்டையில் முடிவடைந்தது. அவன் உள்ளத்தில் உறைந்திருந்த அந்த அன்பு தினம் அவனையே சுற்றி வந்தது. "ஸ்கூல்" முடிந்து வரும் போதும் அவள் வீட்டை வலம் வரும் அளவிற்கு அவளின் அழகும், பண்பும் அவனை ஒரு பித்தனாக்கிவிட்டது. அவள் சாதாரணமாக தலைவி நின்றால் போதும் அழகு ஜொலிக்கும். அவள் கண்கள் தான் எத்தனை அழகு. அதனை சிறிது நேரம் பார்த்துக்கொண்டிருந்தால் போதும் எல்லாமே மறந்து விடும். அவன் கண்முன் அவளின் நிழலே நிழலாடியது. மலர்ந்த தாமரைக் கிண்ணங்களாக கன்னங்களும் முகமும் தெரிந்தன. துளிகூட க்காஸ்மெடிக்ஸ் இல்லை. மஸ்காரா, மேக்கப் ஏதும் இல்லை. பால் வெளிபோல் ஒரு நிதான வெண்மை வதனமெங்கும் படிய இரு கன்னங்களும் இரு உணர்ச்சி சிகரங்களாகத் தெரிந்தன அவனுக்கு. அவன் தன்னையே வலம் வருவதை இருந்து உணர்ந்த அவள் பார்வையில் கருணையும் இருந்தாலும் ஓரத்தில் ஏக்கம் இருந்தது. நாளடைவில் அவன் போக்கில் அவள் மாற்றம் கண்டாள். ஓரத்தில் இருந்த ஏக்கம் அவன் மேல் காதலாக மலர்ந்தது. காதல் என்ற ஓடத்திலே இருவரும் உல்லாசமாக மிதந்தார்கள்.

அன்று அவன் வழமைக்கு முன்னதாகவே ஆடை அணிகிறான். ஏன் இந்த அவசரம் என்று அவனுக்கே புரியாமல் இருந்தது. அவன் தாயிடம் சொல்லிவிட்டு விரைவாகவே ஸ்கூலுக்குப் புறப்பட்டான். வழமைபோல் அன்றும் திலகனும் அவனின் நண்பர்களும் ஸ்கூல் இடைவேளையின்போது வீதிக்கு வந்தார்கள். "என்னடா திலீப். உங்க அம்மா இங்க நிற்கிறாங்க." அவன் காட்டிய திசையை நோக்கித் திரும்பினான் திலீப். நண்பன் தொடர்ந்தான் "இதற்கு முதலும் பார்த்திருக்கிறேன்டா. அவங்களோட நிக்கிறவங்க உனக்குச் சொந்தமா?" என்று கேட்டான். திலீப் திகைக்கிறான். சற்றும் புரியாமல் அவர்களைப் பார்த்தான். உற்றுப் பார்க்கப் பார்க்க அந்த கோலம் விசேஷமாகத் தட்டுப்பட்டுவிட்டது. அன்றும் அவனும் இதே மாதிரிக் கேட்டான். அன்றும் அவனும் நோயாளியாகக் காட்டியே அதுவும் இந்த நேரத்தில். இன்று இவன் ஏதோ ஒரு கோலம் படர்ந்திருப்பதை உணர்கிறான். அவள் மீது ஏதோ தீயை மிதித்தவன் போல் துள்ளினான். வெட்கத்தின் சாயையோடு அவர்களைப் பார்த்து மெல்லிய புன்னகை புரிந்தான். உண்மையில் அந்த மலிவுப் பேச்சுக்களை அவன் அப்போது விரும்பவில்லை. அந்த சந்தர்ப்பத்திற்கு அவர்கள் பேச்சு பொருந்தாததாக இருந்தது. எனக்குத் தேவையான துணையை நான் தேடிக்கொண்ட இந்த வேளை, அது மலர்ந்தும் மலராத மொட்டாகவே தென்பட்டது. அவன் மௌனமாகவே இருக்க விரும்பினான். அன்று ஸ்கூல் முடிய விரைவாகவே சென்று சாந்தியை சந்தித்தான். "என்ன திலீப் வியர்க்க விறுவிறுக்க ஓடிவாறீங்க" என்று கேட்டாள் சாந்தி. "இல்ல சாந்தி இன்றைக்கு உன்னைச் சந்திக்க நேரம் இல்லை. இனிமேல் வராது என்று நினைக்கின்றேன். அதுதான் பார்த்திட்டுப் போகலாம்

www.padippakam.com

என்று வந்தேன்." என்று சொல்லிவிட்டு அவள் பதிலைக் கூட எதிர்பாராமல் வெளியேறினான் தினேஷ். அவன் போகும்போது சாந்தியையே திரும்பி திரும்பி பார்த்தான். அவள் கண்களில் இருந்து அவன் மறையவில்லை. அவள் கண்கள் தாரைதாரையாக நீரைக் கொட்டியது. ஒவ்வொருத்தர் வாழ்க்கையும் ஒவ்வொருத்தருக்கு விதித்திடும். அவன் வாழ்க்கையும் அப்படித்தான். இதிலே என்ன பிரமாதமாக இருக்கிறது என்று அவன் மனம் நினைத்தது. அவனுக்கு வீட்டுக்குப் போக மனமில்லை. உடம்பில் ஒரே பதற்றம். ஒரு வினாடியில் உடம்பெல்லாம் விறைத்தமாதிரிபோல இருந்தது. வழக்கமாகத் தெரியும் தெருக்காட்சிகள் அனைத்தையும் திடீரென்று சாரமற்று ஜீவனில்லாமல் இருந்தது. அவ மனதிலுள்ள சுமையை இறக்கி வைக்க கோயிலுக்குச் சென்றான். "அட கடவுளே! ஏன் என்னை சோதிக்கிறாய். உனக்கு இரக்கமே கிடையாதா? பாசமுடன் பாலூட்டி வளர்த்த தாயே இன்று பாதைமாறி வேசி மகன் என்ற பட்டத்தையே தேடித் தந்திட்டாள். இதைவிட நஞ்சூட்டிக் கொன்றிருக்கலாமே!" அவன் உள்ளத்தின் வேதனை எரிமலையானது. "நீ என்ன செய்கிறாய். உனக்கு எப்படிப் பணம் வருகிறது என்று என்னாலே கேட்க முடியாமல் என் மனதையே மந்தமாக்கிவிட்டாயே. நீ கடவுள் இல்லை. வெறும் கல்லுதானே! அழகான ஒரு இடம்பத்தை கட்டிச் சுவராக்க வந்த பேய். நானு உன்னை ஒரு உயர்ந்த இடத்தில் வைத்து பூஜித்தேன். அதற்கு நீ காட்டிய கருணை இதுதானா? என்னை நாலுபேர் மத்தியில் தலைநிமிர்ந்து நடக்க முடியாமல் ஆக்கிவிட்டாயே. நீ நினைத்தால் வெட்டினாய். அது தலைதூக்கு முன் வேரோடே சரிக்கிறே. இது உனக்கு நல்லா இருக்குதா? அவ போட்ட கோலம் அழகாய் இருக்கணும் என்று ஆசைப்பட்டாள். நீ என்டாவென்றால் அந்தக் கோலத்தையே அலங்கோலமாக்கிட்டியே. உன்னிட்ட கேட்டு என்ன பிரயோசனம். உன்னிட்ட கேட்டு வந்த எனக்கு செருப்பால அடிக்கணும். உனக்குத்தான் வாயில்லையே. தவளையைப் பாம்பு விழுங்கினால் இது இயற்கை எனலாம். தவளையை தவளையே விழுங்கலாமா?" அவனுக்கு வந்த சோதனையும் வேதனை இந்த உலகத்தில யாருக்குமே வரக்கூடாது. அதே நேரத்தில அவ மனதில் ஏன் இந்த வஞ்சம் ஏற்படுகிறது. கெட்டுக்கெட்ட நாய்க்கு மனு வாழ்வதைவிட செத்துமடிவதுமேல் என்று நினைத்தான். அவன் கோவிலின் வீட்டுப்படியை மிதிக்கும்போது வாசலில தாய் நிற்பதைக் கண்டும் காணாதவனாய் தன் அறையை நோக்கி நடந்தான்.

ஒரு முறைக்கு இருமுறை அழுதழுது தன் அறையைப் பார்த்தான். பின் அவன் வெளியை நோக்கி நடந்தான். அவள் தாய் அவனுக்காகத் தேனீர் போட்டுக் கொண்டிருந்தாள். இப்படியென்று அவன் உள்ளத்தின் ஓரத்தில் ஒரு தீ ஏற்படுகிறதே! அது இதுவரை அவன் அனுபவித்திராத தீதானே. அவன் கண்கள் பளபளக்கும் முகத்தின் மேல் விழுந்தது. அவள் மெல்ல முகத்தை நிமிர்த்தினாள். அதில் என்ன உணர்ச்சிகள் இருந்ததென்று சொல்ல முடியாது. பெரிய தயக்கமான விழிகளால் அவனைப் பார்த்தாள். உதடுகள் என்னவோ சொல்லத் துடித்தன. ஆனால் சொல்லவில்லை. இன்று அவள் வாழ்க்கையே அஸ்தமனமானது. அவள், அவனின் மணக்கோலம் பார்க்க விரும்பினாள். இன்று அவன் அவளின் பிணக்கோலம் பார்க்கிறான். நீலாம்பரி கேட்கத்துடித்த அவன் மனது முகாரி ராகம் இசைக்கிறது. அவன் கண்கள் வெறுமனே வெற்று வெளியை நோக்கியது. அவன் கால்கள் நீதியைத் தேடி நடை போட்டது.

* முற்றும் *

www.padippakam.com

# சமையல் கலை

போளி :— ஆக்கம்:- திருமதி. R. துலகநாதன்.

## தேவையான பொருட்கள்

| | | |
|---|---|---|
| கடலைப் பருப்பு | - 500 கிராம் | ஒரு கலவை (முதலாவது கலவை) |
| தேங்காய்ப் பூ | - பாதித் தேங்காய் (நுணுக்கமானது) | |
| சீனி | - 200 கிராம் | |
| ஏலக்காய் | - வாசனைக்கு சிறிதளவு | |
| கோதுமை மா | - 750 கிராம் | ஒரு கலவை (இரண்டாவது கலவை) |
| நெய் | - 3 தேக்கரண்டி | |
| உப்பு | - 1 தேக்கரண்டி | |
| மஞ்சள் தூள் | - சிறிதளவு | |
| நெய் | - தேவையான அளவு. | |

## செய்முறை

கடலைப் பருப்பை நன்றாக ஊறவைத்துக் கழுவி அவிக்க வேண்டும். தேங்காய்ப்பூ, சீனி, ஏலக்காய், கடலைப் பருப்பு எல்லாவற்றையும் மசிக்கவேண்டும். (உலர்ந்த கலவையாக) கோதுமை மாவை நீர் சேர்த்து ரொட்டிக்கு குழைப்பது போல இறுக்கமாக குழைக்கவேண்டும். பின்பு நெய், உப்பு, மஞ்சள் தூள் எல்லாவற்றையும் சேர்த்துக் குழைக்க வேண்டும். கோதுமை மா கலவையில் சிறிதளவை உருண்டையாக எடுக்கவும். பின்பு தட்டில் மா தூவி உருண்டையை உருளையால் மெல்லியதாகப் பரப்பி உருட்டவும். அவற்றுக்கு மேல் முதலாவது கலவையில் நான்கு தேக்கரண்டி இட்டு மடிக்கவும். மடித்ததைத் திரும்பவும் தட்டில் வைத்து உருளையால் மசித்துப் பரப்பவும் (மெல்லியதாக). பின்னர் பொரிக்கும் தட்டில் நெய்யிட்டுக் கரைந்து பரப்பிய மாவை வாட்டி எடுக்கவும்.

---

மென்மையான இதயம் கொண்டவன்தான் ஒரு உன்னதமான கலைஞன். ஆனால் அதுவே அவனது பலவீனமும் ஆகிவிடுகிறது.

www.padippakam.com

# * உணவின் குறைபாட்டினால் ஏற்படும் "மராஸ்மஸ்" *
# (NUTRITIONAL MARASMUS)

- திருமதி. யாழினி. தர்மகுமார்
(உதவி வைத்திய அதிகாரி)

முன்னேற்றமடைந்துவரும் நாடுகளில் 'மராஸ்மஸ்' மிகவும் கூடுதலாகக் காணப்படுகிறது. இது ஒருவயதுக்குட்பட்ட குழந்தைகளையே பொதுவாகப் பாதிக்கிறது. மேலும் வறுமையான குடும்பச் சூழலில் வளரும் குழந்தைகளைப் பெருமளவில் பாதிக்கிறது. இது செயற்கை முறையில் சுகாதாரமற்ற முறையில் பாலூட்டப்படும் குழந்தைகளில் அதாவது மிகவும் ஐதான நிலையில் தயாரிக்கப்பட்ட பாலாலும் போதுமான அளவு வழங்கப்படாத நிலையாலும் ஏற்படுகிறது. இந்நிலை செலவைச் சுருக்குவதற்காகப் பெற்றோர் மேற்கொள்ளும் நடவடிக்கையாலேயே ஏற்படுகிறது. இதனால் அந்த உணவானது குழந்தைக்கு புரதத்தைப் பொறுத்த அளவிலும் கலோரிகளைப் பொறுத்த அளவிலும் குறைவாக இருக்கிறது. மேலும் இந்த நிலையானது வயிற்றோட்டம் அடிக்கடி ஏற்படுகின்ற ஒரு குழந்தையிலும் காணப்படும். கருப்பவதியாக விளங்குகின்ற தாயார் வழங்கும் பாலாலும் இந்நிலை ஏற்படலாம்.

ஒரு குழந்தை "மராஸ்மஸ்" இனால் பாதிக்கப்பட்டிருப்பின் அக்குழந்தையில் சில அறிகுறிகள் காணப்படும். அவையாவன, வளர்ச்சி குன்றுதல், நிறை குறைவு ஏற்படல், தோலுக்குக் கீழே காணப்படுகின்ற கொழுப்புப் படைகளை இழத்தல் இதனால் குழந்தையில் ஒரு வயதான தோற்றம் (old appearance) காணப்படும். வழமையாக நீர்த்தன்மையான வயிற்றோட்டம் அல்லது பகுதித் திண்ம, அமில மலம் வெளியேறல். (watery-diarrhoea, semi solid acid stools. மேலும் குழந்தையின் தலைமயிரும் தோலும் நல்ல நிலையில் காணப்படாது. பசியற்ற தன்மை பொதுவாகக் காணப்படுவதில்லை. (anorexia). அத்துடன் வயிறு வாயுவினால் பொருமிக் காணப்படலாம். காசநோய் போன்ற நாட்பட்ட தொற்று நோய்கள் (chronic infection) என்பன உள்ளதா என்பதை ஆராய வேண்டும். ஏனை



படிப்பகம்

www.padippakam.com

இவை 'மராஸ்மஸ்' ஏற்படுவதற்குக் காரணமாக அமையலாம்.

குழந்தையை 'மராஸ்மஸ்' ஏற்படாதவாறு பாதுகாப்பதற்குக் குழந்தைக்குத் திருப்தியான உணவு வழங்குதல் வேண்டும். மேலும் ஆரோக்கியமான தாய்மார் தாய்ப்பால் வழங்குவதன் முக்கியத்துவத்தை உணர்தல் வேண்டும். அத்துடன் செயற்கைப் பால் வழங்குவதாய் இருந்தாலும் குழந்தைக்குப் போதுமான அளவிலும் சரியான செறிவிலும் வழங்குதல் வேண்டும். மேலும் வயிற்றோட்டம் ஏற்படாதவாறு குழந்தையை நல்ல சுகாதாரச் சூழலில் வைத்திருத்தல் வேண்டும். இவ்விதம் குழந்தையைப் பேணிப் பாதுகாக்க வேண்டும்.

## அகதிகள் கணிப்பு (30.9.86)

| வட்டாரம் | முகாம் எண்ணிக்கை | குடும்பங்களின் எண்ணிக்கை | ஆட்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| திருகோணமலை | 23 | 5,780 | 28,746 |
| மட்டக்களப்பு | 5 | 2,301 | 10,722 |
| முல்லைத்தீவு | 8 | 2,420 | 10,889 |
| வவுனியா | 6 | 727 | 3,127 |
| மன்னார் | 2 | 233 | 1,047 |
| கிளிநொச்சி | 5 | 280 | 11,397 |
| கிளிநொச்சி (வெளி முகாம்) | — | 5300 | 26,500 |
| யாழ்ப்பாணம் | 11 | 1201 | 5,301 |
| யாழ்ப்பாணம் (வெளி முகாம்) | — | — | 14,699 |
| மொத்தம் | 60 | 18,242 | 102,428 |

ஆதாரம் :- TAMIL TIMES.

படிப்பகம்




VIDEO CLUB

RÜMERBRUNNEN 25-8-4.

4050 M-G-2

02161-393181

- இரசிகர்களை திருப்திப்படுத்தும் -

கலை நிறுவனம்.

# படவிமர்சனம்:-




காதல் என்பது இயல்பாக ஏற்பட வேண்டிய ஒன்று. அதை ... வலிந்து பெற முயன்று... தோல்வி காண்கிறார் இதில் நடிகர் கார்த்திக். இருட்டாக வந்தாலும் நிழல்கள் ரவி அதிஷ்டசாலிதான். கேளாமலே கிடைத்து விடுகிறது அந்தக் காதல் அவருக்கு. அது சரி..... தேவையற்று...... வில்லத்தனமாக நடிகர் கார்த்திக்கை எப்போதும் சந்தேகிக்கும் ரஞ்சனி பாவம். அத்தான் விஜய்சக்கரவர்த்தியின் குணம் தெரிந்தும்--- அவருடன் தனியே புறப்பட நினைத்தது எந்த சாமர்த்தியத்தில் சேர்ந்தது. அத்தானின் சேட்டைகளை ஏற்கனவே கண்டும் அதைப் புரிந்து கொள்ள முடியாத மக்கா அவர். நிழல்கள் ரவியை ஒரு உன்னத கதாபாத்திரமாகச் சித்தரித்து விட்டு திடீரென விளையாட்டுப் பிள்ளையாகத் திரிந்து கொண்டிருந்த கார்த்திக்கை ஒரு தியாகப் பாத்திரமாக்கி அவரைச் சாகடித்திருக்கிறார்கள். என்ன இருந்தாலும் இந்தக் கதாநாயகி போல அதிஷ்டம் செய்தல்லவா பிறக்க வேண்டும். காதலனே கணவனாகிவிட்டான். போதாததிற்கு அவனுக்கு கண்களைக் கொடுப்பதற்கென்றே ஒருவனும் கிடைத்துவிட்டான். மொத்தத்தில் வெளிச்சம் சிறந்த பொழுதுபோக்குப் படம்.

## யாழ். இளம் பெண்கள் கத்தோலிக்க அமைப்பு (Y.W.C.A)

மிகவும் சமீபத்தில் யாழ் நகரிலுள்ள டச் கோட்டையில் குடிகொண்டிருக்கும் இலங்கை இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட 'செல்' தாக்குதல்களின் விளைவால் பாதிக்கப்பட்டிருக்கும் முக்கியமான கட்டிடங்களில் எமது Y.W.C.A யும் ஒன்றாகும்.

கடந்த வருடம் பங்குனி மாதம் யாழ் நகர சபையினரால் புதிதாக நடைமுறைப்படுத்த விருந்த தீயணைப்புப் படையின் ஆரம்ப விழாவிற்கு வருகை தந்திருந்த இலங்கைக்கான கனடியத் தூதுவர் திரு. கொலகொற (COLLACOTT) என்பவரால் Y.W.C.A யின் தலைமைச் செயலகம் திறந்து வைக்கப்பட்டது. இந்த Y.W.C.A, பாடசாலையிலிருந்து விலகி தங்களது மேற்படிப்பை படித்து முடிக்கும் எமது பெண்பிள்ளைகளின் பாடசாலையாகவும் அமைந்திருந்தது என்பது குறிப்பிடத் தக்கது. 200க்கும் மேற்பட்ட மாணவிகளைக் கொண்ட இக் கட்டடம், பெண்பிள்ளைகளின் நலன் கருதியும், Y.W.C.A க்கென்றொரு தலைமையலுவலகம் இருக்கப்படவேண்டியதன் அவசியம் கருதியும் Y.W.C.A, வேறொரு இடத்தைத் தேடுவதில் பிரச்சனையை எதிர் நோக்கிக் கொண்டிருக்கிறது.

## முறிகண்டி பிள்ளையார் கோவில் உடைப்பு

யாழ்ப்பாணத்திலிருந்து 50 கிலோமீற்றர் தெற்கேயுள்ள முறிகண்டிப் பிள்ளையார் கோவில், கடந்த 31-10-86 மாலை பாரிய வான் தாக்குதலுக்கு இலக்கானது. அக்கோவிலைச் சுற்றியுள்ள கடைகள் வீடுகள் உட்பட கோவில் பூசாரியின் வீடும் எரிக்கப்பட்டதுடன் தரைமட்டமாக்கப்பட்டுள்ளது.

## தொலைபேசித் தொடர்பு நிலையம் தகர்ப்பு

திருகோணமலை தொலைபேசித் தொடர்பு நிலையம் கடந்த 28.10.86 அன்று ஆயுதம் தாங்கிய குழுவொன்றால் அங்கு காவலுக்கிருந்த காவலாளிகளைக் கட்டி வைத்ததுமல்லாமல், பாரிய தொகுதி வெடிகுண்டை வெடிக்கச் செய்ததன் விளைவு அந்தத் தொலைபேசித் தொடர்பு நிலையம் தகர்க்கப்பட்டு விட்டது.

ஆதாரம். TAMIL TIMES
தமிழகம். T.K

www.padippakam.com

## புதையல் திருட்டு - தொகுப்பு - J. S. பிள்ளை

ஒரு நாட்டை அறிவுள்ள அரசன் ஒருவன் ஆண்டு வந்தான். எப்படிப்பட்ட இடியப்பமான வழக்காக இருந்தாலும் எளிதாகத் தீர்ப்பு வழங்கி விடுவான். அதனால் அவன் புகழ் உலகெங்கும் பரவியிருந்தது. அந்த நாட்டிலிருந்த ஒரு வியாபாரி திடீரென்று வெளியூர் செல்லவேண்டியிருந்தது. தான் சேர்த்து வைத்த பொற்காசுகளை வீட்டில் விட்டுச் சென்றால் திருடர்கள் திருடி விடுவார்கள் என்ற பயம். கையில் எடுத்துச் சென்றாலோ வழிப்பறிக் கொள்ளையர்கள் பறித்துக் கொள்வார்கள் என்ற அச்சம். என்ன செய்வது என்று சிந்தித்தான். அவனுக்கு ஒரு யோசனை தோன்றியது. அதன்படி ஊரிலிருக்கும் ஓர் அரச மரத்தடியில் பொற்காசுகளை வேருக்கு அடியில் புதைத்து வைத்தான். அதன் பிறகு நிம்மதியாக வெளியூர் சென்று வேலைகளை ஒரு வாரத்திற்குள் முடித்துக் கொண்டு ஊர் திரும்பினான். வந்தவுடனே பொற்காசுகளைப் புதைத்து வைத்த இடத்திற்குச் சென்று தோண்டினான். ஆனால் அங்கே பொற்காசு ஒன்று கூட இல்லை. வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு நேராக அரசனிடம் சென்று நடந்ததைக் கூறி, பொற்காசுகளை மீட்டுத் தரும்படி வேண்டிக் கொண்டான். இதைக் கேட்ட அரசன், "பொற்காசுகளை இவன் புதைத்ததை யாருமே பார்க்கவில்லை. நம் ஊரில் இருப்பதோ ஒரே ஓர் அரசமரம்தான். அந்த வேருக்கு அடியில் இருந்த புதையலைக் கண்டு திருடியவர் யாராக இருக்கும்?" என்று யோசித்தான். அறிவாளியான அந்த அரசன் ஒரு வாரத்திற்குள் திருடனைக் கண்டு பிடித்துவிட்டான். எப்படி?

விடை :- அடுத்த இதழில்

www.padippakam.com

அன்புள்ள ஆசிரியருக்கு.....

உணர்வாங்களுடைய ஜீவத்துடிப்புக்களுடன் கூடிய புரட்சிகரமான நவீன படைப்புக்களைத் தாங்கிய 'தென்றலவள்' தொடர்ந்தும் எம்மவர் கைகளிலே தவழ்ந்து வந்து விளையாடித் தமிழ் வளர்ப்பாள்" என்ற எனது நப்பாசையினை விளைத்து விடாதீர்கள்

அக் / அப்துல் ரலீக் (HÖXTER)

ஆறாம் திங்களில் அடியெடுக்கும் தென்றலே நூறாம் திங்களிலும் நீ வர வேண்டுகிறேன்.

க. சண்முகரத்தினம் (ESSEN)

'தென்றலின்' இனிய சுகத்தில் திளைத்தவர்களில் நானும் ஒருவன். உங்களின் பத்திரிகையில் வெளிவந்த "குடற்புண் உங்களைத் ----?" எனும் வைத்தியாலோசனைக் கட்டுரை மிகவும் பயனுள்ள. இதுபோன்ற பயனுள்ள கட்டுரைகளை எதிர்பார்க்கின்றோம். இச்சேவை மேலும் வளர வாழ்த்துகின்றேன்.

K. நடராஜா (LIEBENACE)

தென்றல் வந்துவிட்டால் தொடங்கிவிடும் எங்களுக்குள் சண்டை. யார் முதலில் படிப்பதென்று. வெறும் பொழுது போக்கு என்றில்லாமல் பயனுள்ள பல விடயங்களையும் சுமந்துவரும் தென்றலே நீ வாழி.

M. செபஸ்தியன் (ENSE-2)

குறுக்கெழுத்துப் போட்டி 5இல் (2-20) இடமிருந்து வலம் தரவில் சிறு பிழை காணப்பட்டுள்ளது. அதாவது அதன் மறுமொழியான 'இந்த' என்ற சொல் இடமாறியுள்ளது என்பதே சரியானது. இனிமேல் தெளிவாகக் குறிப்பிட்டால் என்போன்ற போட்டியாளர்கள் குழம்பாமல் போட்டியில் கலந்து கொள்ள முடியும் என நம்புகிறேன்.

V. A. புவனேந்திரன் (REMSCHEID)

ஒவ்வொரு மாதமும் தென்றலை எதிர்பார்த்திருந்து கிடைக்கும் போது நான், நீ எனப் போட்டி போட்டு வாசித்து மகிழும் எத்தனையோ குடும்பங்களில் என் குடும்பமும் ஒன்று. தங்களின் முயற்சி தளராது தொடர எங்களின் பங்களிப்பு என்றுமுண்டு என்பதைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறோம்.

செ. விக்கினேஸ்வரன் (WITTEN)

உங்கள் பணி தொடர வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

M. தியாகேஸ் (BOCHUM)

படிப்பகம்

www.padippakam.com

# வாசகநேயர்களே

இச்சஞ்சிகையானது, எந்தவிதமான ஒரு தனிப்பட்ட ஈழத்தரசியல் இயக்கங்களுக்குச் சார்பற்றது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். மேலும் அரசியலைப் பொறுத்தவரையில், உங்களுடைய தனிப்பட்ட, ஆனால் எந்தவொரு இயக்கத்தையும் சாடாதவகையில், உங்கள் எண்ணங்களைப் பிரதிபலிக்கும் வாய்ப்பை, 'நிச்சயம்' "தென்றல்" வழங்கும்.

இச்சஞ்சிகையில் வெளியாகும் கதைகளில் வரும் எந்தவொரு கதாபாத்திரமும் கற்பனையானவையே. அத்துடன் இதில் வெளிவரும் சகலவிதமான அம்சங்களையும் மறுபரிசீலனை செய்யவோ, அன்றித் திருத்தியமைக்கவோ ஆசிரியருக்கு அதிகாரம் உண்டு என்பதையும் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும், "தென்றலுக்கான உங்களுடைய ஆக்கங்கள் யாவற்றையும் தபால்மூலம் நீங்கள் அனுப்பவேண்டிய முகவரி;

T. THARMACUMAR (KANNAN)

NEUSTADT STR - 123,

4330, MÜLHEIM/RUHR


WEST. GERMANY.

தொலைபேசி இல :- 0208 - 406881

- இதழாசிரியர், -
திருமதி. யாழினி தர்மகுமார்.
- வெளியீட்டாசிரியர் -
திரு. த. தர்மகுமார். (கண்ணன்)

படிப்பகம்

www.padippakam.com




படிப்பகம்